# பொது அறிவு

## பகுதி: 2

தொகுப்பாக்கம்:

க. குணராசா, *B. A. Hons. (Cey.) C. A. S.*

விற்பனையாளர்:

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**

காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

விலை: ரூ. **10-00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லியனடோடாவின்சி கொபர்நிகஸ்

அத்தியாயம்: நான்கு

# பெரியார்கள்

## 1. அரிஸ்டாட்டில் (*Aristotle*) என்பவர் யார்?

அரிஸ்டாட்டில் (கி: மு: 384 — 322) ஒரு கிரேக்க தத்துவ ஞானி. கிரேக்க நாட்டில் ஸ்ட்டாகிரா என்ற ஊரில் பிறந்தார்: பிளேற்ரோ என்ற அறிஞரின் மர்ணவராக இருந்தார்: மாமன்னன் மகா அலெக்சாந்தரின் ஆசிரியராக அரிஸ்டாட்டில் இருந்தார். அவர் தத்துவ ஞானியாக மாத்திரமன்றி, கவிஞராக, ஓவியராக, சிந்தனையாளராகவும் விளங்கினார்: அதென்ஸ் நகரில் தத்துவக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்தார்; தத்துவம், விஞ்ஞானம், அரசியல் என்பனவற்றைப் போதித்தார். தத்துவம், அறிவியல் துறைகளில் பல நூல்களையும் எழுதினார்.

## 2. ஆர்க்கிமிடிஸ் (*Archimedes*) என்பவர் யார்? அவரின் தத்துவம் என்ன?

ஆர்க்கிமீடிஸ் (கி: மு: 287 — 212) ஒரு கிரேக்கக் கணிதவியலாளரும் விஞ்ஞானியுமாவார்; இத்தாலி நாட்டைச் சேர்ந்த சிசிலித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவில் பிறந்தார். தண்ணீர் நிரம்பிய தொட்டி ஒன்றினுள் குளிக்க இறங்கினர். அவர் இறங்கியவுடன் தண்ணீர் மட்டம் உயர்ந்து சிறிதளவு தண்ணீர் வெளியே வழிந்ததைக் கண்டார். உடனே அவருக்கு ஒரு பெரிய உண்மை புலனாகியது. "ஒரு திடப்பொருளுக்குக் காற்றில் இருக்கும் எடையை விட, திரவத்தில் இருக்கும் எடை குறைவாக இருக்கும். இவ்விரு எடைகளுக்கும் உள்ள வித்தியாசம் திடப்பொருளால் வெளியேற்றப்பட்ட திரவத்தின் எடைக்குச் சமம்" என்று கண்டறிந்தார்; ஆர்க்கிமீடிசின் தத்துவம் இது தான். இத் தத்துவ அடிப்படையில் தான் பெரிய கப்பல்களை இன்று கட்டப்படுகின்றன.

**3. அநகாரிக தர்மபால என்பவர் யார்?**

இலங்கையின் விடுதலை இயக்க முன்னோடிகளில் அநகாரிக தர்மபால (1864 — 1933) ஒருவராவார். அவரது இளம் வயதுப் பெயர் டொன் டேவிட் ஆகும். அவர் சிறந்த சமூகத் தொண்டராகவும், தேசியவாதியாகவும் விளங்கினர். ஆங்கில அந்நியராட்சியில் இலங்கை மக்கள் தமது கலாச்சாரத்தைப் படிப்படியாக இழந்து வருவதைக் கண்டார். 'பௌத்த மக்களே, விழித்திடுவீர்' என்று நாடுமுழுவதும் குரல் எழுப்பி, சொற்பொழிவுகளை நிகழ்த்தி மக்களை விழிப்படைய வைத்தார்; பௌத்த மதத்தின் சிறப்பை உலகெங்கும் எடுத்தியம்பினர்.

**4. இலங்கையில் சைவத்திற்கும் தமிழுக்கும் பாடுபட்ட பெரியார் யார்? அவர் தொண்டுகளைக் கூறுக.**

சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய இலங்கைப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவர். (1822—1879) இவர் நல்லூரில் பிறந்தார். அந்நியராட்சியில் தமிழ் மக்கள் இன, சமயத்துறைகளில் வீழ்ச்சியுற்று வருவதை நாவலரால் பொறுக்க முடியவில்லை. அதனால், சைவசமயத்தின் மகிமையையும் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதில் ஊக்கம் காட்டினர். இலங்கையில் சைவத்தைக் கட்டிக் காத்தவர் நாவலரே. இவர் கருத்தாழம்மிக்க உரைகளை நிகழ்த்தினர்; அச்சகம் ஒன்று நிறுவி, நூல்கள், சஞ்சிகைகளை அச்சிட்டு வெளியிட்டார்; பாடநூல்களை எழுதினர். புராதன தமிழ்நூல்களைப் பதிப்பித்தார்; தமிழ் மாணாக்கரின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்காகப் பாடசாலைகளை நிறுவினர்.

**5. எடிசனின் கண்டுபிடிப்புகள் சிலவற்றைக் கூறுக.**

தோமஸ் ஆல்வா எடிசன் (*Thomas Alva Edison*) (1847—1931) அமெரிக்காவின் சிறந்த விஞ்ஞானியாவார்; மிலான் என்ற ஊரில் பிறந்தார். இளம் வயதிலேயே இவருக்கு ஆராய்ச்சிகளைச் செய்வதில் விருப்பம் இருந்தது. புதுப்புதுக் கருவிகளைக் கண்டுபிடித்தார்; மின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார விளக்கு, சினிமா, தொலைபேசி, கிராமபோன், தட்டச்சுப் பொறி முதலியவற்றை இவர் கண்டுபிடித்தார். ஆயிரத்துக்கு மேற் பட்ட புதுக்கண்டுபிடிப்புகள் எடிசனுடையவையாகும்;

6. இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானி யார்? அவருடைய கண்டுபிடிப்பு என்ன?

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானி அல்பேட் ஐன்ஸ்ரைன் (*Albert Einstein*) (1879 – 1955) ஆவார். பௌதிக விஞ்ஞானத்தில் பெரியதொரு திருப்பத்தை உண்டாக்கினார்; கணித மேதை, இவர் ஜேர்மனியில் பிறந்தார்; நாஜிகளால் துரத்தப்பட்டு அமெரிக்காவில் குடியேறினர். இவர் 'சார்புக் கொள்கை' (*Theory of Relativity*) என்ற பெயரில் தனது ஆய்வை வெளியிட்டார்; ஒரு பொருளின் எடைக்கும் அப்பொருளிலிருந்து பெறக்கூடிய சக்திக்கும் உள்ள தொடர்பை சார்புக் கொள்கை விளக்குகிறது; அதற்காக ஐன்ஸ்ரைனுக்கு நோபல் பரிசும் 1921 இல் வழங்கப்பட்டது.

7. "பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே"–என்ற புகழ் பெற்ற பொன்மொழியைக் கூறிய அறிஞர் யார்?

கன்பூஷியஸ் (*Confucius*) ஆவார்; சீனவில் கி. மு. 551 — 479 வரை வாழ்ந்த பேரறிஞர்; தத்துவஞானி. தாழ்ந்த நிலையிலிருந்த சீன மக்களின் வாழ்க்கை முறையை உயர்த்தவும், மக்களை ஒழுக்கமாக வாழ வைக்கவும் அவர் நன்னெறி கூறி, பாடுபட்டார். நீதிபதியாகவும் அமைச்சராகவும் பதவி வகித்து பல சீர்திருத்தங்களைச் செய்தார்; இவரது தத்துவங்களைப் பின்பற்றும் 'கன்பூஷியனிசம்' என்ற மதமும் சீனவில் உள்ளது;

8. இந்தியாவின் தேசத் தந்தை யார்? அவரின் சிறப்புகள் எவை?

இந்தியாவின் தேசத்தந்தை காந்தியடிகள் (1869-1948) ஆவார்; அடிமைப்பட்டு வாடி நின்ற இந்திய மக்களுக்கு ஒரு வல்லரசை எதிர்த்து நிற்பதற்கான துணிவையும் ஆற்றலையும் காந்தி தந்தார்; ஆயுதம் எடுத்துப் போராடாமல் அன்பு, அகிம்சை, சத்தியம் இவற்றைக் கொண்டே விடுதலைக்குப் போராடி வெற்றி பெற்றார். அகிம்சை முறையிலான சத்தியாக்கிரகம் என்பதை,காந்தியடிகளே உலகிற்கு அறிமுகப்படுத்தியவர். குஜராத்தில், போர்ப்பந்து என்ற ஊரில் காந்தி பிறந்தார்; பாரிஸ்டர் பட்டம் பெற்றவர்; உயர்ந்த இலட்சியங்கள் கொண்ட உத்தம புருஷர் காந்தியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9. கலிலியோ (*Galileo*) என்ற அறிஞரைப்பற்றிக் கூறுக.**

விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் கலிலியோ (1564 – 1642) ஆவார். இத்தாலியைச் சேர்ந்த இவர் பௌதிகத்திலும் வானவியலிலும் பேரறிஞர்; ஊசல் கடிகாரத்தின் கண்டுபிடிப்பிற்குக் காரணமாக இருந்தவர்; தொலைகாட்டி ஒன்றினை முதன் முதல் செய்து முடித்தவர். அதன் மூலம் வானவெளியை நன்கு ஆராய்ந்தார். பூமி முதலான கோள்கள் சூரியனைச் சுற்றுகின்றன என்ற கருத்தை வலியுறுத்தினார். சூரியனில் கரும்புள்ளிகள் உள்ளன என்றும், சந்திரனில் மலைகள் உள்ளன என்றும் தொலைகாட்டி மூலம் கண்டு கூறினார். உயரத்திலிருந்து போடப்படும் எந்த ஒரு பொருளும், எடை குறைவானதாயும் எடை கூடியதாக இருந்தாலும் ஒரே வேளையில் தான் நிலத்தை வந்தடையும் என நிரூபித்தார். அவருக்குப் பின்னல் வந்த வானவியல் விஞ்ஞானிகள் எல்லாரும் கலிலியோவின் ஆராய்ச்சியையே அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சிகள் செய்தார்கள்.



கலிலியோ கெப்ளர்

**10. மேரி கியூரி (*Marie Curie*) அம்மையாரின் விஞ்ஞானத் தொண்டு யாது?**

மேரிகியூரி (1867 — 1934) போலாந்து நாட்டில் பிறந்து பிரான்சில் கல்வி கற்றவர்; கணவர் பியெர் கியூரியுடன் சேர்ந்து விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற் கொண்டார். யுரேனியத்தைவிட சக்திவாய்ந்த தனிமமான ரேடியத்தை, யுரேனியத்திலிருந்து பிரித்தெடுப்பதில் வெற்றி கண்டார். 1903 இல் பௌதிகத்தில் இவருக்கும் கணவருக்கும் நோபல் பரிசு கிடைத்தது. 1911 — இல் இரசாயனத்தில் மேரி கியூரிக்கு மீண்டும் நோபல் பரிசு கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. அவுஸ்திரேலியாவை முதன்முதல் கண்டுபிடித்த கடலோடி யார்?**

ஜேம்ஸ்குக் (1728 – 1789) என்ற ஆங்கில மாலுமியாவார். தென் கடலில் காணப்படுவதாக நம்பப்பட்ட கண்டத்தைத் தேடி இவர் புறப்பட்டார். நியூசிலாந்தையும் அவுஸ்திரேலியாவையுமே இவரால் அடைய முடிந்தது. இவர் தனது 14 வது வயதில் கப்பலின் கூலியாளாகச் சேர்ந்து, 1755 இல் கடற்படை வீரரானார்: அதன் பின்னரே புதிய நாடு காணலில் ஈடுபட்டார். தனது பயண அனுபவங்களை நூல்களாக எழுதியுள்ளார்.

**12. ஜோன் எஃப் கென்னடி என்பவர் யார்?**

ஐக்கிய அமெரிக்காவின் 35 - வது ஜனாதிபதியாக விளங்கியவர் ஜோன் கென்னடியாவார் (1917 — 1963); 1961 இல், தனது 43 - வது வயதில் இவர் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். ஜனாதிபதிகளாகப் பதவி வகித்தவர்களில் மிகவும் இளையவர் கென்னடியே. இவர் பரந்த நோக்கமும் சமாதானத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுமுடையவராக இருந்தார். அணு ஆயுத ஒழிப்பு உடன்படிக்கை ஏற்பட முயற்சி எடுத்தார்; அமெரிக்காவில் வாழ்கின்ற நீக்கிரோவர்களுக்குச் சமவுரிமை வழங்கச் சட்டமியற்றினார். மிகக் குறுகிய காலத்தில் உலகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர் கென்னடி;

**13. கிறிஸ்தோபர் கொலம்பஸ் என்பவர் யார்?**

அமெரிக்காக் கண்டத்திற்கு வழிகண்டு பிடித்து, புகழ் பெற்ற இத்தாலியக் கடலோடி கிறிஸ்தோபர் கொலம்பஸ் (1451 - 1506)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவார். இத்தாலியில் ஜெனேவா நகரில் பிறந்தார்; சிறு வயது முதலே கடற் பிரயாணத்தில் ஆர்வமுடையவராக விளங்கினர்; கப்பல் ஒன்றில் பணியாளராகச் சேர்ந்து கடலில் பிரயாணம் செய்தார். 'இந்தியாவிற்குக் கடல்வழி ஒன்று கண்டுபிடித்துத் தருகிறேன்' எனப் போர்த்துக்கல் மன்னனிடம் கேட்டார்; மன்னன் மறுக்கவே ஸ்பெயின் மன்னன் பேர்டினன்ட்டின் உதவியைப் பெற்ருர்; மூன்று கப்பல்களில் லிஸ்பனிலிருந்து புறப்பட்டு மேற்குப் புறமாகச் சென்ருர்; இரண்டு மாதங்கள் அத்திலாந்திக் சமுத்திரத்தில் நிலப்பரப்பு எதுவும் காணுமல் பயணம் செய்து, இறுதியில் 1492 சான் சல்வடோர் என்ற தீவை அடைந்தார்; இதுவே இந்திய நாடெனக் கொலம்பஸ் நம்பினர். பின் நாடு திரும்பினர்.

**14. அண்டத்தின் மையம் பூமி என்ற தவருன கருத்தை மாற்றியமைத்தவர் யார்?**

போலாந்து நாட்டைச் சேர்ந்த கொபர் நிகஸ் (1473 - 1543) என்பவரே, பூமியைச் சூரியனும் கோள்களும் சுற்றி வருகின்றன என்ற கருத்தை மாற்றியமைத்தவராவார். அண்டத்தின் மையம் சூரியன்; சூரியனை மையமாகக் கொண்டு பூமி முதலான கோள்கள் சுழல்கின்றன என கெபர்நிகஸ் 'ரிவல்யூ சன்ஸ்' என்ற நூலில் தெரிவித்தார்;

**15. கெப்ளர் என்பவர் யார்? அவரின் கண்டுபிடிப்புகள் என்ன?**

கெப்ளர், ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த அறிவியலாளராவார்; 1571 இல் பிறந்தார். கொபர்நிகஸின் கருத்துக்களை இவர் விரும்பிப் படித்தார், அதனுல், வானவியலில் ஈடுபாடு கொண்டார். டைக்கேபரா என்ற வானவியலறிஞருடன் சேர்ந்து கெப்ளர் ஆராய்ச்சிகளைச் செய்தார். கொபநிகஸ், சூரியனைக் கோள்கள் **வட்டப் பாதையில்** சுற்றுகின்றன என்ருர்; கோள்கள் எல்லாம் சூரியனை **நீள்வட்டப் பாதையில்** சுற்றி வருகின்றன என்று கெப்ளர் கண்டுபிடித்தார். இவரது கணிப்புகள் துல்லியமானவை.

**16. சேர். வின்ஸ்ரன் சேர்ச்சில் என்பவர் யார்?**

சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில் (1874 - 1965) பெரிய பிரித்தானியாவின் தலைசிறந்த அரசியல் வாதியாவார்; இங்கிலாந்தில் பிறந்தார்: தென்னுபிரிக்காவில் போயர் (*Boer War*) யுத்தத்தில் பங்குகொண்டார்; 1900 இல் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரானுர். முதல் உலக மகா யுத்தத்தின்போது கடற்படை அமைச்சராகப் பணியாற்றினுர்; இரண்டாம் உலகமகாயுத்தத்தின்போது பிரதம மந்திரியானுர்; இந்த யுத்தத்தில் வெற்றி தேடிக் கொடுத்த பெருமை இவரையே சாரும்; இவர் பல நூல்கள் எழுதியுள்ளார்; 1953இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17.** பின்வரும் பேரறிஞர்கள் குறித்து விளக்கம் தருக.

(i) சாக்கிரட்டீஸ் (ii) டால்ஸ்டாய்
(iii) தொலமி (iv) ருடால்ப் டீசல் (v) ஸ்ராபோ

(i) சாக்கிரட்டீஸ் – (கி. மு. 470 399) கிரேக்கநாட்டின் தலைசிறந்த தத்துவஞானி சாக்கிரட்டீஸ் ஆவார்; கிரேக்க நாட்டின் தலைநகரான அதென்சில் பிறந்தார். ஒழுக்கத்தைப்பற்றி மக்களுக்கு அறிவுரை வழங்குவதையே தனது நோக்கமாகக் கொண்டிருந்தார்; 'உன்னை நீ அறிந்துகொள்' என்பதே சாக்கிரட்டீசின் முக்கிய அறிவுரை. நாத்திகத்தைப் பரப்புவதாகக் குற்றம் சாட்டி, நஞ்சு கொடுத்து இவரைக் கொன்றனர்.

(ii) டால்ஸ்டாய் – (1828 — 1910), உலகப் புகழ்பெற்ற பேரறிஞர் டால்ஸ்டாய்; இவர் புகழ்பெற்ற ருசிய நாவலாசிரியர்; சிந்தனையாளர். ருசியப் படையில் ஒரு அதிகாரியாக இருந்தார். போரில் பெற்ற அனுபவங்களை வைத்து ஒரு நூல் எழுதினர். 'போரும் அமைதியும்', 'அன்ன கரீனின' என்பன உலகப் புகழ்பெற்ற இவரது நாவல்களாகும்.

(iii) தொலமி – (கி. பி. 100—170). கிரேக்கநாட்டின் பண்டைய வானியல் அறிஞர் தொலமி ஆவார். இவர் புவியியல், கணிதம் ஆகிய துறைகளிலும் மேதையாக விளங்கினர்; அகலக் கோடுகள், நெடுங்கோடுகள் கொண்டு, பூமியின் ஓரிடத்தைத் தீர் மானிக்கலாம் என வகுத்தவர் இவரே. தெரிந்த உலகத்தை முதன் முதல் படமாக வரைந்து வெளியிட்டவரும் தொலமியே; புவியியல் நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டார். தனது படத்தில் இலங்கையை தப்ரபான என்று குறித்துள்ளார்.

(iv) ருடால்ப் டீசல் – (1858 - 1913)— டீசல் எஞ்சினைக் கண்டுபிடித்தவர் இவரே; இவர் ஜேர்மனி நாட்டைச் சேர்ந்தவர். நீராவி எஞ்சினை விடச் சிறந்த ஒரு எஞ்சினைத் தயாரிக்க முயன்று டீசல் எஞ்சினைத்தயாரித்து முடித்தார்.

(v) ஸ்ராபோ கிரேக்க அறிஞர்; கணிதம், புவியியல், வானியல் அறிஞர். உலகப்படம் ஒன்றை முதன்முதல் வரைந்தவர்.

**18.** நெப்போலியன் என்பார் யார்?

ஏழையாகப் பிறந்து, பிரான்சிய நாட்டின் சர்வாதிகாரியாக உயர்ந்தவீரன் நெப்போலியன் போனபார்ட் (1769 — 1821) ஆவார்; கார்சிக்கா தீவில் பிறந்தார். பிரான்சியப்படையில் படை அதிகாரி யாக இருந்தார். 1789 — இல் பிரான்சிய மக்கள் தங்கள் அரசருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதி 'பிரான்சியப் புரட்சி'யை நடத்தியபோது, நெப்போலியன் புரட்சிப் படையில் சேர்ந்து போரிட்டு வென்றுர். பிரான்ஸ் குடியரசானது. நெப்போலியன் அண்டை நாடுகளான இத்தாலி, ஸ்பெயின் முதலான ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றினுர். 1804 இல் பிரான்சின் பேரரசாக முடி சூடினுர். ருசியாவுடன் நடாத்திய வாட்டலூ சண்டையில் தோல்வியடைந்தார்; ஆங்கிலப்படை இவரைக் கைதுசெய்து நாடுகடத்தியது.

**19. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் யார்?**

ஜவாஹர்லால் நேரு (1889—1964) ஆவார்; அலகாபாத்தில் பிறந்த இவர் 18 ஆண்டுகள் பிரதமராக இருந்தார். நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டவர். இருபதாம் நூற்றுண்டின் புகழ் பெற்ற அரசியல் மேதைகளில் ஒருவர்.

**20. 'நவீன மருத்துவத் தாதித் தொழிலின் தாய்' எனப் புகழ் பெற்றவர் யார்?**

நைட்டிங் கேல் அம்மையார் (1820 19 0) ஆவார். இத்தாலியில் பிறந்து இங்கிலாந்தில் வளர்ந்தார். மருத்துவத் தாதியாகச் சேர்ந்தார்; யுத்த முனைக்குச் சென்று காயமடைந்த போர்வீரர்களுக்குப் பணிவிடை செய்தார். மருத்துவத் தாதிப் பயிற்சி முறைக்கு வேண்டிய பல நூல்களை எழுதினுர்?

**21. லூயி பாஸ்ட்டர் (Louis Pasteur) என்பவர் யார்?**

வெறிநாய் கடிக்கு 'ஸீரம்' என்ற ஊசி மருந்தைக் கண்டுபிடித்த பிரான்சிய விஞ்ஞானி லூயி பாஸ்ட்டர் (1822—1895) ஆவார், நுண்ணுயிர்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். கறந்த பாலைக் கெடாமல் பாதுகாப்பது 'பாஸ்ட்டர் முறை' மூலமேயாகும். கால் நடைகளுக்கு 'அந்தரக்ஸ்' என்ற நோய் வராமல் தடுக்க அம்மைப் பால் போன்ற தடுப்பு முறையைக் கண்டுபிடித்தார்;

**22. பிளேட்டோ (Plato) என்பவர் யார்?**

உலகப் புகழ்பெற்ற கிரேக்கச் சிந்தனையாளர்களில் பிளேட்டோ (கி. மு. 427—347) ஒருவராவார்; சாக்கிரடீசின் மாணவராவர். இவர் தத்துவஞானியாகவும் கவிஞராகவும் விளங்கினுர். பல நூல்களை எழுதினுர். 'குடியரசு' எனும் அரசியல் நூலை எழுதியுள்ளார்.

**23. முதன் முதல் பெருமளவில் மலிவாகக் கார்களைத் தயாரித்தவர் யார்?**

ஹென்றி போர்ட் (1863—1947) ஆவார். அமெரிக்காவில் மிச்சிகன் என்ற இடத்தில் பிறந்தார். டெட்ரொயிட் நகரில் ஒரு தொழிற்சாலையில் சேர்ந்தார். அங்கு எந்திரங்களை ஆராய்ந்து 1893-இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார் எஞ்சின் ஒன்றைத் தயாரித்தார். 1903-இல் போர்ட் கார் நிறுவனம் உருவாகியது.

**24. மார்க்கோப்போலோ என்பவர் யார்?**

பல மலைகளையும் பாலைநிலங்களையும் தரைமார்க்கமாகக் கடந்து, ஐரோப்பாவிலிருந்து கிழக்கு ஆசியாவரை பயணம் செய்தவர்; மார்க்கோப்போலோ (1254 – 1324) ஆவார். இத்தாலிநாட்டில் வெனிஸ் நகரிலிருந்து புறப்பட்டு, சீனாவுக்கு வந்தார். சீனாவை அரசாண்ட குப்பிளாக்கான் அரசனின் அரசசபையில் பதினேழு ஆண்டுகள் தூதுவராக இருந்தார். பின்னர் கடல் மார்க்கமாகத் தன் நாடு திரும்பினார். தனது பயண அனுபவங்களை நூலாக எழுதினார்.

**25. கப்பல் மூலம் உலகத்தைச் சுற்றிவந்து உலகம் உருண்டை வடிவினது என நிரூபித்த கடலோடி யார்?**

பேர்டினன்ட் மகெலன் (1480 – 1521) என்பவராவார். போர்த்துக்கல் நாட்டில் பிறந்தார். இந்தியாவிற்கு மேற்குப் பக்கமாகக் குறுகிய கடற்பாதை ஒன்றைக் கண்டுபிடிக்க, ஸ்பானிய மன்னன் சார்ஸ்சின் உதவியுடன், ஐந்து கப்பல்களில் 250 மாலுமிகளுடன் புறப்பட்டார். இரண்டு மாதங்கள் அத்திலாந்திக் சமுத்திரத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணம் செய்து, மகெலன் தொடுகடலைக் கடந்து பசுபிக் சமுத்திரத்தில் பிரவேசித்து பிலிப்பைன் தீவுகளை நீண்ட பயணத்தின்பின் அடைந்தனர். அங்கு சுதேசிகளின் விஷ அம்புக்கு மகெலன் பலியானுர். ஆனுல், இறுதியில் அவரது கப்பல் ஸ்பெயின் வந்து சேர்ந்தது.

## 26. கம்யூனிசக் கொள்கையை வகுத்தவர் யார்?

கார்ல் மார்க்ஸ் (*Karl Marx*) (1818—1883) ஆவார். நாட்டின் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் சமூகத்தின் பொதுவுடைமையாக இருக்க வேண்டும் என்பது கம்யூனிசக் கொள்கையாகும். மேற்கு ஜேர்மனியில் பிறந்தார் இவர் பல நூல்களை இயற்றினுர். 'மூலதனம்' என்பது இவருக்குப் புகழ் தந்த நூல்.

## 27. முசோலினி (*Mussolini*) என்பவர் யார்?

இத்தாலி நாட்டின் சர்வாதிகாரியாக 21 ஆண்டுகள் இருந்தவர் முசோலினி (1883—1945) ஆவார்; 'ஆட்சியிலுள்ளவர்கள் என்ன சொன்னுலும் செய்தாலும் அதை மக்கள் எதிர்க்கக்கூடாது' என்ற கொள்கையை இவரே நிலைநாட்டினுர்; இக்கொள்கையை பாசிசம் (*Fascism*) என்பர். இத்தாலியில் ஒரு கிராமத்தில் பிறந்து முதலில் பள்ளி ஆசிரியராகக் கடமையாற்றி, பின் கட்சிப் பத்திரிகை ஆசிரியராகி, பின் போர்ப்படையில் சேர்ந்து போராடி, பலதடவை சிறை சென்று, 1922இல் பிரதமராகி, சர்வாதிகாரியானுர். சிறந்த நிர்வாகி; இத்தாலியில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். எனினும் அதிகார ஆசையால் இறுதியில் அழிந்தார்.

## 28. ரவீந்திரநாத் டாகூர் என்பவர் யார்?

இந்தியாவின் புகழ்பெற்ற மகாகவி ரவீந்திரநாத் டாகூர் (1861—1941) ஆவார்; அவர் ஒரு தத்துவஞானியாகவும், நாடகாசிரியராகவும், நாவலாசிரியராகவும், ஓவியராகவும் விளங்கினுர். வங்காளத்தில் 'சாந்திநிகேதன்' என்ற ஆச்சிரமத்தை நிறுவினுர். 'கீதாஞ்சலி' என்ற கவிதை நூலிற்காக அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது இந்தியாவின் தேசிய கீதமான 'ஜனகணமன' என்ற கீதத்தை இயற்றியவர் டாகூரர்வார்.

## 29. நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி யார்?

சேர் சீ. வீ. ராமன் (1888—1970) என்ற இந்திய விஞ்ஞானி நோபல் பரிசு பெற்றுர். இவர் தஞ்சை மாவட்டத்தில் பிறந்தார்; ஒளிக் கதிர்களின் நிறச் சிதறலை ஆராய்ந்தார்; வானமும் கடலும் நீல நிறமாக இருப்பதன் காரணத்தைக் கண்டு அறிந்தார். அதனை 'ராமன் விளைவு' (*Raman Effect*) என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30. லியனுடோ டாவின்சி என்பவர் யார்?**

பல துறைகளிலும் சிறந்து விளங்கிய மாமேதை லியனுடோ டாவின்சி (1452 1519) இத்தாலிய நாட்டவர் ஆவார். விஞ்ஞானி, கணிதவியலாளர், ஓவியர், சிற்பி, இசைமேதை, வானவியலாளர் எனப் பல துறைகளிலும் இவர் புகழ் பெற்ருர். 'மோனலீசா' என்ற அழகான பெண்ணின் ஓவியத்தை இவர் வரைந்தார்; அந்த ஓவியப் பெண்ணின் புன்னகை இன்றும் புகழ்பெற்றது. மேலும், தான் செய்ய விரும்பிய எந்திரங்களைப் படங்களாக வரைந்தார்; யந்திரத் துப்பாக்கி, யுத்தடாங்கி, நீர்மூழ்கிக்கப்பல், பறக்கும் யந்திரம் என்பன அவர் வரைந்தவை; அவர் மனித உடற்கூறுகளின் அமைப்பியலையும் ஆராய்ந்துள்ளார்.

**31. ஆபிரகாம்லிங்கன் என்பவர் யார்?**

ஒரு விறகு வெட்டியின் மகனுகப்பிறந்து, ஐக்கிய அமெரிக்காவின் 16 வது ஜனதிபதியாக உயர்ந்தவர் ஆபிரகாம் லிங்கன் (1809 - 1865) ஆவார். நீக்கிரோ மக்களுக்கு அடிமை நிலையிலிருந்து விடுதலை வழங்கியவர் லிங்கன்! அதனல் உலகப் புகழ் பெற்றவர். கெண்டகி மாநிலத்தில் பிறந்த லிங்கன் பள்ளிக்குச் செல்லாமல் தன் சொந்த முயற்சியால் படித்து முன்னேறியவர்.

**32. சோவியத் ருஷியாவின் தந்தை யார்?**

சோவியத் ருஷியாவின் தந்தை எனப் போற்றப்படுபவர் லெனின் (1870 — 1924) ஆவார். கம்யூனிசக் கொள்கையை ருஷிய மக்களிடையே பரப்பி, அதை நடைமுறைப்படுத்தியவர் லெனின்; கார்ல் மார்க்சின் பொதுவுடைமைத் தத்துவத்தை இவர் நன்கு கற்று, ருஷியாவில் புரட்சியைத் தோற்றுவித்தார்; ருஷ்யாவை பொதுவுடைமை நாடாக்கினர்.


**33. ஜோர்ஜ் வாஷிங்டன் என்பவர் யார்?**

ஐக்கிய அமெரிக்காவின் முதல் ஜனதிபதியாக விளங்கியவர் ஜோர்ஜ் வாஷிங்டன் (1732 - 1799) ஆவார். இங்கிலாந்தை எதிர்த்து அமெரிக்கர் நடாத்திய சுதந்திரப்போராட்டத்தில் அமெரிக்கப் படைகளுக்குத் தலைமைதாங்கியவர் வாஷிங்டன் ஆவார். அமெரிக்காவுக்கு வெற்றி தேடித்தந்தார்.

**34. வஸ்கொடகாமா என்பவர் யார்?**

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்குச் செல்வதற்கு முதன் முதல் கடல் வழியைக் கண்டுபிடித்தவர் வஸ்கொடகாமா (1469 - 1524) ஆவார். போர்த்துக்கல் மன்னரின் உதவியுடன், லிஸ்பன் நகரத்திலிருந்து 1497 இல் கப்பல்களில் புறப்பட்டார். 1498 - இல் இந்தியாவின் மேற்குக்கரையை (கள்ளிக் கோட்டை) அடைந்தார். கோவாவில் நிலையான போர்த்துக்கேயக் குடியேற்றத்தை அமைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**35.** பெர்னாட்ஷா என்பவர் யார்?

ஆங்கில இலக்கியத்துறையில் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் பெர்னாட்ஷா (1856 - 1950) ஆவார். இவர் ஒரு புகழ்பெற்ற நாடகாசிரியர்; 50 — க்கு மேற்பட்ட நாடகங்களை எழுதினார்; நான்கு நாவல்களையும் எழுதினார்; நகைச்சுவையாக எழுதப்பட்ட சீர்திருத்த நாடகங்கள் இவருடையவை.

**36.** உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடகாசிரியர் யார்?

வில்லியம் ஷேக்ஸ்பியர் (1564 - 1616) ஆவார். இவர் சிறந்த ஒரு கவிஞராவார். 37 நாடகங்களை எழுதினார்; அவற்றில் பல துன்பியல் நாடகங்களாகும். அவையே அவருக்கு உலகப் புகழைத் தந்தன. ரோமியோ ஜூலியட், ஹம்லெட், மக்பெத், ஒத்தெல்லோ, லியர் அரசன், ஜூலியசீசர் என்பன ஷேக்ஸ்பியரின் மிகச் சிறந்த நாடகங்களாகும். உலகமொழிகளில் இவரின் நாடகங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.


**37.** ஸ்ராலின் என்பவர் யார்?

ஒரு ஏழைத் தொழிலாளியாகப் பிறந்து சோவியத்ருஷியாவின் சர்வாதிகாரியாக உயர்ந்தவர் ஸ்ராலின் (1879 - 1953) ஆவார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளராக 30 ஆண்டுகள் விளங்கினார். லெனினின் சீடராகவிருந்தார் ருஷியாவைக் கைத்தொழில் மயமாக்கியவர் ஸ்ராலின் ஆவார்.

38. சேர். பொன்னம்பலம் இராமநாதன் என்பவர் யார்?



இலங்கையின் பழைய அரசியல் வாதிகளில் சேர் பொன்னம்பலம்இராமநாதன்(1857-1930)முக்கியமானவர். இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைவர். 1915 இல் நிகழ்ந்த முஸ்லீம் - சிங்கள இனக்கலவரத்தின்போது, சிங்கள மக்கள் அனுபவித்த இன்னல்களை இங்கிலாந்து சென்று எடுத்துரைத்து, வெற்றிபெற்றவர். கல்வித் துறைக்குத் தொண்டாற்றினார். இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி என்ற இவர் நிறுவிய கல்லூரிகளே.

39. எஃப். ஆர். சேனநாயக்கா என்பவர் யார்?

இலங்கையில் மதுவிலக்கு இயக்கத்தை ஆரம்பித்தவர் எஃப் ஆர். சேனநாயக்க (1882 1926) ஆவார். மீரிகமையில் பிறந்த இவர், சமூகத் தொண்டராக விளங்கினார். 1912 இல் இலங்கைத் தீவு முழுவதும் மதுபானத் தவறணைகள் திறக்கப்பட்டபோது, மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றால் ஏற்படக்கூடிய தீமைகளை எடுத்துப் பிரச்சாரம் செய்தவர். இவர் டி எஸ். சேனநாயக்காவின் சகோதரராவார்.

## 40 ஹிட்லர் என்பவர் யார்?

பன்னிரண்டு ஆண்டுகள் ஜேர்மனியைச் சர்வாதிகாரியாக ஆண்டவர் ஹிட்லர் (1889 - 1945) ஆவார். உலகில் ஜேர்மனியரே உயர்ந்தவர்கள் என்று கருதி உலகநாடுகள் முழுவதையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முயன்றார். இரண்டாம் உலகமகா யுத்தத்திற்குக் காரணமாக இருந்தவர் இவரே. நாஜிக்கட்சியை ஜேர்மனியில் தாபித்தார்; இலட்சக்கணக்கான யூதர்களை ஈவிரக்கமின்றி அழித்த மனநோயாளி

## 41. சித்திலெப்பை என்பவர் யார்?

இலங்கை வா முஸ்லீம்கள் தமது பாரம்பரியத்தைப் பேணி வ ழ வழிகாட்டியவர் எம் சி. சித்திலெப்பை (1832 - 1898) ஆவார். இலங்கை முஸ்லீம்கள் தமது கருமங்களில் அராபிய மொழியை உபயோகிக்க வேண்டுமென்றும், அதன்மூலம் தமது மதம், பண்பாடு ஆகியன மீது நெருங்கிய பற்று வருமென சித்திலெப்பை எடுத்துரைத்தார். பள்ளிவாசல்களை நன்கு பரிபாலிக்கச் செய்ததுடன், மத்ரஸா என்ற சமயப் பாடசாலைகளையும் புனருத்தாரணம் செய்தார். முஸ்லீம் நேசன், ஞானதீபம் ஆகிய பத்திரிகைகளையும் நடாத்தினார்.

## 42. இலங்கையின் முதலாவது பிரதமமந்திரி யார்?

திரு. டி. எஸ். சேனநாயக்க (1884 - 1952) அவர்களே இலங்கையின் முதலாவது பிரதமமந்திரி ஆவார். மீரிகமத்தில் போத்தலே என்ற கிராமத்தில் பிறந்தார்; சுதந்திரப் போராட்டங்களில் பங்கு கொண்டார். 1947-இல் ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கி பொதுத்தேர்தலில் போட்டியிட்டு, வெற்றியீட்டி முதலாவது பிரதமமந்திரியானார். அவர்காலத்தில் நீர்ப்பாசனக் குளங்கள் திருத்தியும் புதுக்கியும் அமைக்கப்பட்டன; கல்லோயாத்திட்டம் போன்ற குடியேற்றத் திட்டங்களையும் இவர் உருவாக்கினார். இவரின்பின் பிரதமமந்திரியாக இருந்தவர் டட்லி சேனநாயக்கா ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. ஈ. டபிள்யூ. பெரேரா என்பவர் யார்?



சுதந்திர இலங்கையை உருவாக்குவதில் பாடுபட்டவர்களில் ஈ. டபிள்யூ பெரேரா (1875 - 1953) ஒருவராவார்; இவர் ஒரு வழக்குரைஞர்; எனினும், வழக்குரைஞராகக் கடமை வகிக்காது, சமூகசேவையில் ஈடுபட்டார். 1915 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது, சேர் பொன்னம்பலம் இராமநாதனுடன் இங்கிலாந்து சென்று, அங்கு எடுத்துரைத்து, சிறையிலிருந்த சிங்களத்தலைவர்களை மீட்டார். டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ், ஹொரணைத் தொகுதியின் பிரதிநிதியாக அரசாங்க சபையில் இருந்தார்.

## 44. பின்வரும் அறிஞர்கள் குறித்து விளக்கக் குறிப்புகள் தருக.

| | |
|---|---|
| (i) இபன் பத்தூத்தா | (ii) சார்ளி சப்ளின் |
| (iii) சார்ள்ஸ் டார்வின் | (iv) வால்ட்டிஸ்னி |
| (v) சிக்மண்ட் பிராய்ட் | (vi) கரிபால்டி |
| (vii) கெலன் கெலர் | (viii) மரியா மொன்ரசோரி |
| (ix) பிக்காசோ | (x) ரொக்பெல்லர் |

(i) இபன்பத்தூத்தா — தென்னாபிரிக்காவைச் சேர்ந்த அறிஞர்; அபராத பிரயாணி 1333-இல் இந்தியாவிற்கு வந்தார்; 8 ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்தார். முகமது துக்ளக்கின் ஆட்சிபற்றி எழுதியுள்ளார்.

(ii) சார்லிசப்ளின் — பிரித்தானிய நகைச்சுவை நடிகர் சார்லிசப்ளின் ஆவார்; தனது நகைச்சுவை நடிப்பால் உலக மக்களைக் கவர்ந்தவர்; அவர் பேச்சால் நகைச்சுவையைக் கொட்டியதிலும், நடிப்பால் மக்களைச் சிரிக்க வைத்தார். தனது 88 வயதில், ஜெனீவாவில் காலமானார்.

(iii) சார்ள்ஸ்டார்வின் - பரிணாமக் கொள்கையை (*Theory of Evolution*) வகுத்த விஞ்ஞானி டார்வின் (1809 - 1882) ஆவார். தென் கடல்களில் வாழ்கின்ற மிருகங்களைப் பற்றி ஆராய்ந்து நூல்கள் எழுதினார்; பின்னா மனிதன் எவ்வாறு குரங்குகளின் வழியாகத் தோன்றினான் என விபரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) வால்ட்டிஸ்னி — ஒரு அமெரிக்கக் கார்டுனிஸ்ட் வால்ட் டிஸ்னி ஆவார்; அவர் தனது படைப்புகளில் மிருகங்களைப் பாத்திரங்களாக நடமாடவிட்டார்; மிக்கிமவுஸ் அவர் உருவாக்கிய ஒரு பிரபல பாத்திரம்; குழந்தைகளுக்காக நூல்களை எழுதினார்; கார்ட்டூன் படங்களைத் தயாரித்து வெளியிட்டார். டிஸ்னிலான்ட் என்ற உலகத்தை சிருட்டித்து வைத்துள்ளார். கலிபோர்ணியாவில் 'டிஸ்னிலாண்ட்' உள்ளது; இது ஒரு உயிரியல் நூதன சாலையாகும்.

(v) சிக்மன்ட் பிராய்ட் — உளவியல் துறையின் தந்தை எனச் சிக்மன்ட் பிராய்ட் (1856 – 1939; கருதப்படுகிறார். பாலுணர்வு தொடர்பான உளவியல் பகுப்பாய்வுகளை இவர் செய்தார்.

(vi) கரிபால்டி — இத்தாலிக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த மாபெரும் போர்வீரன் கரிபால்டி (1807 1882) ஆவார். அரசைக் கைப்பற்ற முயன்றார் என இவரைக் கைது செய்தபோது, தென் அமெரிக்காவிற்குத் தப்பி ஓடினார். பின்னர் இத்தாலிக்குத் திரும்பி வந்து 'சிவப்பு சேர்ட்டுகள்' (*Red Shirts*) என்ற புரட்சிப் படையை அமைத்து, இத்தாலிக்குச் சுதந்திரம் பெற்றுக்கொடுத்தார்.

(vii) கெலன் கெல்லர் — உலகில் வலது குறைந்தோருக்காகப்பாடுபட்ட அமெரிக்கப் பெண்மணி கெலன் கெல்லர் ஆவார்; இவர் பிறவியிலேயே குருடாகவும் செவிடாகவும் இருந்தார்.

(viii) மரியா மொன்ரசோரி — குழந்தைகளுக்குரிய கல்வியைப் போதிக்கும் விதம் குறித்து முதன்முதல் விளக்கம் தந்தவர் மரியா மொன்ரசோரி (1869 - 1952) ஆவார்; மொன்ரசோரி கல்வி நிலையங்கள் இவர் வழிகாட்டலிலேயே தொடங்கப்பட்டன; இத்தாலிய நாட்டவர்.

(ix) பிக்காசோ — ஒரு ஸ்பானிய ஓவியர்; உலகப் புகழ் பெற்ற ஓவியர். நவீன ஓவியங்களின் (மோடேன் ஆர்ட்) தந்தை இவரே. பார்த்தவற்றைப் படமாக வரையாது. பார்த்து உணர்ந்தவற்றை ஓவியமாக வரைந்தார்.

(x) ரொக்பெல்லர் — உலகின் மிகப்பெரிய பணக்காரர் ரொக்பெல்லராவார். (1839 - 1944) இவர் அமெரிக்கர்; அமெரிக்காவில் தொழிற்சாலைகள் பலவற்றை ஆரம்பித்தவர். கல்வி, பண்பாடு, சமூக நலன் என்பனவற்றிற்காக இன்று 'ரொக்பெல்லர்' நிதி நிறுவனம்' பண உதவி வழங்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம்: ஐந்து

# சுருக்கக் குறியீடுகள்

## (ABBREVIATIONS)

1. பின்வரும் சுருக்கக் குறியீடுகள் எவற்றைக் குறிக்கின்றன?

(i) UNO (ii) NASA (iii) UNEF (iv) IBRD
(v) OPEC (vi) MBBS (vii) UNICEF (viii) GATT
(ix) UNCTAD (x) USA.

**விடை:**

(i) *UNO* — United Nations Organisation.
ஐக்கிய நாடுகள் தாபனம்.

(ii) *NASA* — National Aeronautic's and Space Administration.
தேசிய விண்கல, விண்வெளித்துறை நிறுவனம்.

(iii) *UNEF* — United Nations Emergency Force
ஐக்கிய நாடுகள் அவசரகாலப்படை

(iv) *IBRD* — International Bank For Reconstruction and Development (World Bank)
புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி. (உலகவங்கி.)

(v) *OPEC* — Organisation of Petroleum Exporting Countries.
பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கான நிறுவனம்.

(vi) *MBBS* – Bachelor of Medicine and Bachelor of Surgery. மருத்துவமாணி

(vii) *UNICEF* — United Nations Inte rnationa Children's Emergency Fund.
ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதி நிறுவனம்.

(viii) *GATT* — General Agreement on Tariffs and Trade.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ix) *UNCTAD* — United Nations Conference on Trade and Development
ஐக்கிய நாடுகளின் வர்த்தகம், அபிவிருத்தி ஆகியவற்றிற்கான ஆணைக்குழு; உங்டாட் தாபனம்.

(x) *USA* — United States of America
அமெரிக்க ஐக்கிய அரசுகள்;

**ஏனைய சில சுருக்கக் குறியீடுகள்;**

*ADB* — Asian Development Bank
ஆசிய அபிவிருத்தி வங்கி;

*ASEAN* — Association on South East Asian Nations
தென்கிழக்கு ஆசிய நாடுகள் நிறுவனம்—ஆசியன்;

*AM* — Ante Meridiem. முற்பகல்

*BA* — Bachelor of Arts - கலைமாணி

*BBC* — British Broadcasting Corporation-
பி; பி; சி; பிரித்தானிய ஒலிபரப்பு நிறுவனம்.

*BC* — Before Christ-- கிறிஸ்துவுக்கு முன்- கி.மு;

*B COM* — Bachelor of Commerce. வர்த்தகமாணி

*B.ED* — Bachelor of Education. கல்விமாணி;

*B SC* — Bachelor of Science விஞ்ஞானமாணி

*CARE* — Cooperative for American Relief Every-where. எல்லா நாடுகளுக்குமான அமெரிக்க நிவாரண உதவி. கெயர்.

*CIA* — Central Intelligence Agency(USA)
சி, ஐ; ஏ. மத்திய உளவு தாபனம்.

*C/O* — Care of- மே/பா; மேற்பார்த்து.

*CWT* -- Hundred Weight. (112 இரு)—அந்தர்;

*D.SC* — Doctor of Science - விஞ்ஞானக்கலாநிதி

*ECG* — Electro Cardio Gram

*EEC* — Europeon Economic Community-
ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*e.g* — Exampli Gratia. (For Example) உதாரணமாக
*etc* — Etecetera (And Other) முதலியன
*FAO* — Food and Agriculttural Organisations (UN) உணவு விவசாய நிறுவனம்
*FRCS* — Fellow of Royal College of Surgeons
*ILO* — International Labour Organisation
சர்வதேசத் தொழிலாளர் நிறுவனம்
*ICAO* — International Civil Ariation Organisation.
சர்வதேச குடிசார் (சிவில்) விமானசேவை நிறுவனம்
*ITO* — International Trade Organisation.
சர்வதேச வர்த்தக நிறுவனம்
*ITU* — International Telecommunication Union
சர்வதேச தந்தி நிறுவனம்
*LTD* — Limited. வரையறுக்கப்பட்டது
*MA* — Master of Arts. முதுகலைமாணி
*MPCS* — பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்
*Mrs* — Mistress. திருமதி
*Mr* — Mister — திரு.
*M.Sc* — Master of science. முது விஞ்ஞானமாணி
*NATO* — North Atlantic Treaty Organisation.
வட அத்திலாந்திக் ஒப்பந்தத் தாபனம்
*NB* — Nota bene (mark well.) குறிப்பு
*OAPEC* — Organisation of Arab Petroleum Exporting Countries.
அராபிய பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் நிறுவனம்
*Oz* — Ounce. அவுன்ஸ்
*Ph.D* — Doctor of Philosophy. கலாநிதி
*P m* — Post Meridiem. பிற்பகல்.
*PM* — Prime Minister. பிரதமமந்திரி.
*PTA* — Parent - Teacher Association.
பெற்றோர் - ஆசிரிய சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*PTO* — Please Turn Over — மறுபக்கம் திருப்புக.

*SEATO* — South East Asia Treaty Organisation.
தென் கிழக்காசிய உடன்படிக்கைத் தாபனம் - சியாட்டோ;

*SP* — Superintendent of Police - பொலீஸ் அதிபர்;

*TV* — Television - ரெலிவிசன் - தொலைக்காட்சி.

*TELEX* — Teleprinter Exchange -
'ரெலெக்ஸ்' தொலைச் செய்திப் பரிமாற்றம்.

*TWA* — Trans - World Airlines (U S A)

*UK* — United Kingdom. ஐக்கியராச்சியம்.

*UNESCO* — United Nations Educational, Scientific and Cultural Organisation.
ஐ: நா: சபையின் கல்வி - விஞ்ஞான - கலாச்சார நிறுவனம்;

*USSR* — Union of Soviet Socialist Republics
ஐக்கிய சோவியத் சமவுடைமைக் குடியரசு

*VIP* — Very Important Person- மிகமுக்கியமான கனவான்

WHO — World Health Organisation.
உலகச் சுகாதார நிறுவனம்.

*Xmas* — hristmas - கிறிஸ்மஸ்

*MOH* — Medical Officer Health
சுகாதார மருத்துவ அதிகாரி

*PHN* — Public Health Nurse
பொதுச் சுகாதாரத் தாதி;

*PHI* — Public Health Inspector.
பொதுச்சுகாதார இன்ஸ்பெக்டர்

*G A* — Government Agent.
அரசாங்க அதிபர்

*AGA* Assistant Government Agent.
உதவி அரசாங்க அதிபர்;

*SLAS* — Sri Lanka Administrative Service
இலங்கை நிர்வாக சேவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*DIG* — **Deputy Inspector General**
பிரதிப் பொலிஸ் மா அதிபர்;

*GS* — **Grama Savaka** - கிராம சேவையாளர்;

*JP* — **Justice of Peace** - சமாதான நீதிபதி

*TULF* — **Tamil United Liberation Front**
தமிழர் விடுதலைக் கூட்டணி.

*SLFP* — **Sri Lanka Freedom Party**
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி.

*UNP* — **United National Party**
ஐக்கிய தேசியக் கட்சி

*LSSP* — **Lanka Samasamaja Party**
இலங்கை சமசமாஜக் கட்சி

*CTB* — **Ceylon Transport Board**
இலங்கை போக்குவரத்துச் சபை

*BMC* — **Building Material Corporation**
கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்.

*CEB* — **Ceylon Electricity Board.**
இலங்கை மின்சார சபை;

*CWE* — **Coperative Wholesale Establishment**
கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்.

*YMCA* — **Young Men Christian Association**
இளைஞர் கிறிஸ்தவச் சங்கம்

*YMBA* — **Young Men Buddhist Association**
இளைஞர் பௌத்த சங்கம்.

*YMHA* — **Young Men Hindu Association**
இளைஞர் இந்து சங்கம்.

*YMMA* — **Young Men Muslim Association**
இளைஞர் இஸ்லாமிய சங்கம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம்: ஆறு

# வரலாறு: அரசியல்: பல்துறை

### 1. கற்காலம் (Stone Age) என்றால் என்ன?

பண்டைய மனிதன் தனது உணவிற்காக மிருகங்களை வேட்டையாடக் கற்களை ஆயுதங்களாகப் பயன்படுத்தத் தொடங்கிய காலமே கற்காலமாகும். இயற்கை நிலையிலுள்ள கற்களை அவை உள்ளவாறே உபயோகித்துத் தனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்ட காலம்.

**கற்காலம்**

கற்காலத்தை (1) பழைய கற்காலம் (பலியோலி திக்யுகம்), (2) மத்திய கற்காலம் (மெசோலிதிக்யுகம்), (3) புதிய கற்காலம் (நியோலிதிக்யுகம்) என மூன்று கால கட்டங்களாக வகுப்பர். பழைய கற்காலத்தில் மனிதன் கல்லாலான செப்பமற்ற ஆயுதங்களை உபயோகித்தான். மத்திய கற்காலத்தில் வேட்டைக்கு நாய்களை வளர்த்ததுடன், ஓரளவு செப்பமான கல்லாயுதங்களை உபயோகித்தான். புதிய கற்காலத்தில் செப்பமான கல் ஆயுதங்களைப் பயன்படுத்தினான். மனிதன் நாகரிகப் பாதையில் அடியெடுத்து வைத்த காலமே நியோலிக் காலமெனும் புதிய கற்காலமாகும். மனிதன் நிரந்தரமாகக் குடியேற்றங்களை அமைத்த காலம் இதுவாகும்.

### 2. நியோலிதிக்கால மனிதனின் வாழ்க்கை முறை எவ்வாறு இருந்தது?

நியோலிதிக் காலமே மனித வரலாற்றில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய காலமாகும். மனிதன் கமத்தொழிலில் ஈடுபட்டு, நிரந்தரமாக ஒரு பிரதேசத்தில் வாழத் தொடங்கிய காலம். கோதுமை, வாற்கோதுமை, சாமை போன்ற தானியங்களைப் பயிரிட்டு உண்டான். விவசாய நடவடிக்கைகளுக்காக மரத்தாலான கருவிகளைச் (கலப்பை) செய்தான்; வீட்டு மிருகங்களை வளர்த்தான். மட்பாண்டங்களை உபயோகித்தான். களிமண்ணாலும் மூங்கிலாலும் ஆகிய குடிசைகளில் வாழ்ந்தான். கம்பளி, சணல் ஆடைகளை நெய்து அணிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. இலங்கையில் கற்கால ஆயுதங்கள் எங்கிருந்து பெறப் பட்டன?**

இரத்தினபுரி, பலாங்கொடைப் பகுதிகளிலுள்ள கற்குழிகள், குகைகள் என்பனவற்றிலிருந்து பெறப்பட்டன. உடுபியன் கற்குகை, படதொம்ப கற்குகை, படதொட்ட கற்குகை, தெரவன கற்குகை, அலுகல் கற்குகை என்பனவற்றிலிருந்து பழைய கற்கால ஆயுதங்கள் கிடைத்தன.

**4. மனித நாகரிகம் வளர்ந்த நதிப்பள்ளத்தாக்குகள் எவை?**

(i) நைல் நதி (ii) இந்துநதி (iii) யூபிரட்டீஸ்-டைகிறீஸ் நதி (iv) குவாங்கோ நதி.

**5. 'முது மக்கள் தாழி'கள் என்பது என்ன?**

எமது பண்டைய மக்கள், இறந்தவர்களின் சடலங்களை பெரிய தாழி (பானை) களில் இட்டு, புதைத்தனர்; இவையே முதுமக்கள் தாழி எனப்படுகின்றது. இந்தியாவில் 1876 இல், ஆதிச்ச நல்லூரில் இத்தகைய தாழிகள் கிடைத்தன.

**6. இலங்கையில் முது மக்கள் தாழிகள் எங்கு கிடைத்தன?**

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில்.

**7. பின்வருவன பற்றி உமக்குத்தெரிந்த விளக்கம் தருக.**

(i) மொஹஞ்சதாரோ – ஹரப்பா நாகரிகம்.

(ii) குவாங்கோ நதிப்பள்ளத்தாக்கு நாகரிகம்.

(iii) நைல் நதிக்கரை நாகரிகம்.

(iv) பாபிலோனிய நாகரிகம்.

(i) மொஹஞ்சதாரோ – ஹரப்பா நாகரிகம் – சிந்து நதிக்கரை நாகரிகத்தையே மொஹஞ்சதாரோ - ஹரப்பா நாகரிகம் என்பர். கி. மு 1500 ஆண்டுகளுக்கு முன் சிந்துநதிக்கரையில் மொஹஞ்சதாரோ - ஹரப்பா ஆகிய இடங்களில் நாகரிகத்தில் முன்னேற்றம் அடைந்த மக்கள் வாழ்ந்துள்ளனர். இப்பகுதிகளில் நகர் முறை நாகரிகம் இருந்தது என்று அகழ்வாராய்ச்சிகள் மூலம் அறியப் படுகிறது. கோட்டை, மாளிகை, மண்டபங்கள், வீதிகள், கிணறுகள், நடைபாதைகள், நீர்வாய்க்கால்கள், குளம், தானியக் களஞ்சியம் என்பன திறமையாக அமைக்கப்பட்டிருந்தன. எனவே, கலை, கட்டிடக்கலை, தொழில் நுட்பம், மொழி, எழுத்து ஆகியவற்றில் பெரு விருத்தியுற்ற மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். சுட்ட செங்கல்லினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடங்கள் கட்டப்பட்டன. மட்பாண்டங்கள், கலைநுட்பமுத்திரிகை, சிவ வடிவம், லிங்கம் என்பன இங்கு கிடைத்துள்ளன.

(ii) குவாங்கோ நதிப் பள்ளத்தாக்கு நாகரிகம் — பழைமை வாய்ந்த சீன நாகரிகமே, குவாங்கோ நதி நாகரிகமாகும். சீனநாகரிகம் மிகவும் தொன்மையானது. இவர்கள் மட்பாண்டத் தொழில், உலோகத்தொழில் தெரிந்தவர்களாக இருந்தனர். மட்பாண்டங்கள், வெண்கலப்பாத்திரங்கள், சிலைகள் முதலியன குவாங்கோ நதிக் கரையில் கிடைத்துள்ளன. பீங்கான் பொருட்கள் சீனக்கம்பளம், வெடி மருந்து, கடுதாசி அச்சிடும்முறை கப்பல் திசைகாட்டி என்பன வற்றினை முதல் சீனுவே உலகிற்கு வழங்கியது.

(iii) நைல் நதிக்கரை நாகரிகம் — எகிப்திய நாகரிகமே நைல்நதிக்கரை நாகரிகமாகும். இங்கு எழுத்து கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், கணிதம், வானவியல் முதலான கலைகள் வளர்ந்திருந்தன என்பதற்கு ஆதாரங்களுள்ளன. சித்திர எழுத்து முறையை நைல் நதிக்கரை மக்களே பின் பற்றியுள்ளனர். பைப்பிரஸ் என்ற ஒரு வகைப் புல்லை வெட்டிக் காய வைத்து அதில் சித்திரச் சொற்களை வரைந்தனர். கணிதமும் வானவியலும் நன்கு பயிலப்பட்டன; முதன் முதலாக பஞ்சாங்கத்தை இவர்களே அமைத்தனர். ஒரு ஆண்டை 365 நாட்களாகவும், ஒரு நாளை 12 மணித்தியாலங்கள் கொண்ட இரவு பகலாகவும் வகுத்தவர்கள் நைல் நதிக்கரை மக்களே! களிமண், சுட்ட செங்கற்கள் என்பவற்றை உபயோகித்துப் பெரும் கட்டிடங்கள் கட்டினர். பிரேதங்களைக் கெட்டுப்போகாவண்ணம் தைலத்தில் பத்திரப்படுத்த அறிந்திருந்தனர். மாபெரும் பிரமிட்டுகளைக் கட்டினர்;

(v) பாபிலோனிய நாகரிகம் — யூப்பிரட்டீஸ், டைகிறீஸ் ஆகிய இரு நதிகளுக்கு இடைப்பட்ட பிரதேச நாகரிகம் பாபிலோனிய நாகரிகம் எனப்படும். மெசப்பத்தேமியா நாகரிகம் எனவும் இதனை வழங்குவர். இங்கு முதன் முதல் குடியேறியவர்கள் சுமேரியர் ஆவார். செம்பின் உபயோகத்தை அறிந்திருந்தனர். பயிர்ச்செய்கை, நெசவு, மட்பாண்டம் செய்தல் என்பன பிரதான தொழில்களாக இருந்தன. களிமண் பலகையில் எழுதும் வித்தையை அறிந்திருந்தனர். ஒரு வருடத்தை 360 பாகைகளாக முதன் முதல் வகுத்தவர்கள் பாபிலோனியர்களாவர்.

8. ஆரியர்கள் என்பார் யார்? அவர்கள் இலங்கைக்கு எப்போது, எங்கிருந்து வந்து குடியேறினர்?

கி. மு 2000 ஆண்டளவில் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்து குடியேறிய மக்கட் கூட்டத்தினரே ஆரியர் ஆவார். அவர்கள் இந்தியாவில் முதன்முதல் பஞ்சாப்பில் குடியேறி வட இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியா முழுவதும் பரந்து குடியேறினர்; வட இந்தியாவிலிருந்த திராவிடர்களை தென்னிந்தியாவிற்குப் புலம் பெயர வைத்தனர். இந்தியாவிலிருந்து ஆரியர்கள் கி மு 500 அளவில் இலங்கையில் குடியேறினர். அவர்கள் வளவைகங்கை, கிரிண்டிஓயா, மாணிக்ககங்கை, களனிகங்கை ஆகிய நதிக்கரைகளில் குடியேறினர். விஜயனும் அவனது கூட்டத்தாரும் இங்குவந்து முதன் முதல் குடியேறிய ஆரியர்கள்; அவர்களின் வழி வந்தவர்களே சிங்களவர்கள்;

## 9. பௌத்த மதத்தின் ஸ்தாபகர் யார்?

கௌதம புத்தராவர்; வட இந்தியாவில் கபில வஸ்துவில் பிறந்தார்; தந்தை சுத்தோதனர் என்ற மன்னன்; தாய் மாயா. அரண்மனை வாழ்வையும் இல்லற வாழ்க்கையையும் துறந்து துறவியானார்; கடுந்தவம் இயற்றினார். 'ஆசையே துக்கத்துக்கு மூலகாரணம்; ஆசையைத் துறந்தால் இன்பமுண்டாகும்'; என்பதைக் கண்டார். உயிர்க்கொலை, களவு, பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டல் ஆகியவற்றை வெறுத்தார்; பலபோதனைகள் செய்தார். அவர் வழியைப் பின்பற்றியவர்கள் பௌத்தர்களாவர்;

## 10. இலங்கையில் எவ்வாறு பௌத்தமதம் நிலைபெற்றது?

இந்தியாவை ஆட்சி செய்த அசோகச்சக்கரவர்த்தி, புத்தமதத்தை உலகெங்கும் பரப்ப எண்ணங்கொண்டான்; அக்காலத்தில் இலங்கையின் மன்னனாக இருந்தவன் தேவநம்பியதீசன் ஆவான். இவனுக்கும் அசோகனுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அதனால், பௌத்த மதத்தில் நம்பிக்கை பூண்ட தேவநம்பியதீசன், அசோகனிடம் தூதுவர்களை அனுப்பினான். இவனது வேண்டுகோளின் படி அசோகன் மகிந்தர், சங்கமித்தை என்ற இரு பௌத்த குருமாரை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். அவர்களே இலங்கையில் பௌத்தமதத்தைப் பரப்பினர்; சங்கமித்தை இலங்கைக்கு வந்தபோது புத்தர் ஞானஒளி பெற்றபோது நிஷ்டையில் இருந்த அரசமரக் கிளை ஒன்றையும் கொண்டுவந்தாள். இந்தக் கிளையிலிருந்து தோன்றிய அரசமரத்தை இன்றும் அனுராதபுரத்தில் காணலாம்.

## 11. மகா அலெக்சாந்தர் யார்?

உலகப்புகழ்பெற்ற மாவீரன்; கிரேக்கமன்னன் அரிஸ்டாட்டிலின் மாணவன்; உலகநாடுகள் பலவற்றையும் வெற்றி கொண்டான்; இந்தியாவையும் வெற்றிகொண்டான்.

## 12. இந்தியாவிலுள்ள பின்வரும் இடங்கள் எவற்றினால் புகழ் பெற்றன?

(i) ஆக்ரா (ii) சாஞ்சி (iii) எலிபாண்டா
(iv) அஜாந்தா (v) மாமல்லபுரம் (vi) மதுரை

(i) தாஜ்மகால் (ii) பௌத்த தூபி (iii) குகைக் கோயில்கள் (iv) சுவர் ஓவியங்கள் (v) சிற்பக் கோயில்கள் (vi) கோயில்கள் - மதுரை மீனாட்சி அம்மன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையிலுள்ள விகாரைகள்

| விகாரை | கட்டுவித்தவன் |
|---|---|
| மகாவிகாரை | தேவநம்பியதீசன் |
| தூபராமசேத்தியம் | தேவநம்பியதீசன் |
| ருவான்வெலிசாய | துட்டகெமுனு |
| லோவமகாபாயா | துட்டகெமுனு |
| அபயகிரிவிகாரை | வலகம்பா |
| ஜேதவனராம | மகாசேனன் |
| தலதாமாளிகை | கீர்த்திஸ்ரீமேவன் |
| லங்காதிலகவிகாரை | மகாபராக்கிரமபாகு |
| கிரி விகாரை | மகாபராக்கிரமபாகு |

## இலங்கையின் நீர்ப்பாசனக் குளங்கள்

| குளம் / கால்வாய் | கட்டுவித்த மன்னன் |
|---|---|
| அபயவீவா | பந்துகாபயன் |
| எருவீவா | வசபன் |
| மின்னேரியாக்குளம் | மகாசேனன் |
| கவுடுலுவீவா | மகாசேனன் |
| குருலுவீவா | மகாசேனன் |
| மகாகணதராவீவா | மகாசேனன் |
| மகாகல்கடவல | மகாசேனன் |
| காலவீவா | தாதுசேனன் |
| ஜயகங்கை | தாதுசேனன் |
| நாச்சடுவீவா | மொகலானன் |
| பதவியாக்குளம் | மொகலானன் |
| குருந்துவீவா | முதலாம் அக்கிரபோதி |
| கந்தளாய்க்குளம் | இரண்டாம் அக்கிரபோதி |
| கிரிதலைக்குளம் | இரண்டாம் அக்கிரபோதி |
| பராக்கிரமசமுத்திரம் | மகாபராக்கிரமபாகு |

**13.** பின்வருவனவற்றின் வரலாற்று முக்கியத்துவம் யாது?

*(i)* மிகிந்தலை *(ii)* சிகிரியா *(iii)* சமன்குத்த *(iv)* கதிர்காமம் *(v)* மகியங்கணை.

*(i)* இலங்கைக்குப் பௌத்த மதத்தைப் பரப்புவதற்கு அனுப்பப்பட்ட மகிந்ததேரரும், மன்னன் தேவநம்பியதீசனும் முதன் முதல் மிகிந்தலையில் தான் சந்தித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) காசியப்பன் என்ற மன்னன் சிகிரியாக் குன்றில் பாதுகாப்பான ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டான் அத்துடன் அற்புதமான அழியா ஓவியங்களை அக்குன்றில் வரைவித்தான்.

(iii) சமன்குத்த என்பது சிவனொளிபாதமலையாகும். அம்மலையின் உச்சியில் இருபாதங்கள் உள்ளன. அவை புத்தருடையவை என பௌத்தரும், சிவனுடையவை என இந்துக்களும், ஆதாமுடையவை என கிறிஸ்தவரும் நம்புகின்றனர்.

(iv) மிகப்பழைய வழிபாட்டுத்தலம் கதிர்காமம்; முருகன் ஆலயம் சிங்களவர் கூட பக்தியுடன் கந்தனை வழிபடுவர்.

(v) புத்தர் இலங்கைக்கு விஜயம் செய்த போது முதன் முதல் காலடி வைத்த இடம் மகியங்கணை ஆகும்.

14. பின்வரும் மன்னர்கள் பற்றி நீர் தெரிந்தவற்றைக் கூறுக?

(i) எல்லாளன் (ii) துட்டகெமுனு (iii) மகாசேனன் (iv) மகாபராக்கிரமபாகு (v) சங்கிலிசெகராசசேகரன்

(i) எல்லாளன் — அனுரதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆண்ட ஒரு தமிழ் மன்னன் எல்லாளன் ஆவான்; இவன் சோழ மரபினன்; இவன் நீதிமான்; இன, மத வேறுபாடுகளின்றி நாட்டை ஆண்டான். துட்டகெமுனு என்ற சிங்கள இளவரசனுடன் தனிப்போரிட்டு தனது நாட்டை இழந்தான்.

(ii) துட்டகெமுனு — அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு எல்லாளன் ஆட்சி செய்தபோது, உருகுணை என்ற இராச்சியத்தைக் கவந்ததீசன் என்பான் ஆண்டான்; இவனது மகனே துட்டகெமுனு. சிறுவயதிலிருந்தே இலங்கை முழுவதையும் ஒரே இராச்சியமாக ஆளவேண்டும் என்று ஆசை கொண்டிருந்தான் தந்தை இறந்ததும் தன்னை மன்னனாக முடி சூடிக்கொண்டு, எல்லாளனை வென்று இலங்கை முழுவதற்கும் அரசனானான் (கி. மு. 101—77) றுவான் வெலிசாயா, லோவமகாபாயா என்பனவற்றை அமைத்தான்.

(iii) மகாசேனன் — இலங்கையில் பல நீர்ப்பாசனக் குளங்களைக் கட்டுவித்ததன் மூலம் புகழ் பெற்ற மன்னன் மகாசேனன் ஆவான். ஜேதவனராம என்ற விகாரையைக் கட்டுவித்தான். இவன் காலத்தில் பௌத்த சங்கத்தில் தேரவாத பௌத்தம், மகாயான பௌத்தம் என்ற இரு பிரிவுகள் தோன்றின. மின்னேரியாக்குளம், கவுடுலுவீவா, குருலுவீவா மகா கணதரா்வீவா, மகாகல்கடவல முதலிய 15 குளங்களை இவன் கட்டுவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(*iv*) மகாபராக்கிரமபாகு—இலங்கையின் புகழ் பெற்ற மன்னன் மகாபராக்கிரமபாகு ஆவான் (1153—1187) மகாபராக்கிரமபாகு இரு வெளிநாட்டு யுத்தங்களில் ஈடுபட்டான். பர்மிய மன்னனோடும், பாண்டிய மன்னனோடும் இவன் படையனுப்பி யுத்தம் புரிந்தான். இலங்காதிலக விகாரை, கிரி விகாரை, கல்விகாரை, விக்கிரகங்கள் என்பன இவனால் அமைக்கப்பட்டன. நீர்ப்பாசன வசதிகள் பலவற்றை இவன் விருத்தி செய்தான். பராக்கிரம சமுத்திரத்தை அமைத்தான்.

(*v*) சங்கிலி செகராசசேகரன்—யாழ்ப்பாண இராச்சியத்தைக் கடைசியாக ஆண்ட மன்னன் சங்கிலி செகராசசேகரன் (1519—1561) ஆவான். இவன் மன்னன் பரராசசேகரனின் மகனாவான்; சங்கிலி போர்த்துக்கேயரை எதிர்த்துப் போரிட்டான். 1560 இல் இவனைக் கைது செய்த போர்த்துக்கேயர், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்.

**15.** இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட அந்நியர்கள் யாவர்?
போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்.

**16.** போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் இருந்த இராச்சியங்கள் எவை?
கோட்டை இராச்சியம் கண்டி இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம்.

**17.** ஒல்லாந்தராட்சியில் இலங்கையின் நிர்வாகப் பிரிவுகள் எவை?
கொழும்புப்பிரதேசம், காலிப்பிரதேசம், கண்டிப்பிரதேசம், யாழ்ப்பாணப்பிரதேசம்.

**18.** (*i*) இலங்கை எந்த ஆண்டு பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்ற நாடு ஆகியது?
(*ii*) இலங்கையின் முதல் ஆங்கிலத் தேசாதிபதி யார்?
(*i*) 1815. (*ii*) பிரெடரிக் நோர்த்.

**19.** கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் யார்?
ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்.

**20.** பின் வருவனவற்றிற்கு விளக்கம் தருக.
(*i*) கோல்புறூக் ஆணைக்குழு.
(*ii*) டொனமூர் அரசியல் திட்டம்.
(*iii*) சோல்பரி அரசியல் திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) கோல்புறூக் ஆணைக்குழு - 1829 இல் இலங்கையின் ஆட்சிமுறையைச் சீர்ப்படுத்துவதற்காக வில்லியம் கோல்புறூக் என்பவரால் வகுக்கப்பட்ட அறிக்கையாகும். இதன்படி இலங்கை முழுவதும் ஒரே நிர்வாக அலகாக மாறியது: இலங்கையின் நிர்வாகத்தை சட்டநிருபணசபை, சட்ட நிர்வாகசபை என்பன நிர்வகித்தன; இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டது; சிவில் சேவையில் இலங்கையரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

(ii) டொனமூர் அரசியல் திட்டம் — 1931இல் இலங்கையின் ஆட்சிமுறையில், டொனமூர்பிரபு என்பவர் ஏற்படுத்திய சீர்திருத்தமே டொனமூர் அரசியலமைப்பு ஆகும். இதன்பயனாக சர்வசன வாக்குரிமை, பிரதேசரீதியான பிரதிநிதித்துவம், அரசியற் சபை, நிர்வாக சபை, மந்திரி சபை என்பன நடைமுறைக்கு வந்தன.

(iii) சோல்பரி அரசியல் திட்டம் — 1943 இல் சோல்பரி என்பார் இலங்கையின் அரசியலமைப்பில் சில மாற்றங்களை உருவாக்கினர்; அதுவே சோல்பரி அரசியல் திட்டமாகும். தேசாதிபதியின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. சர்வசன வாக்குரிமை, பிரதிநிதிகள் சபை, செனற் சபை, தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள், மந்திரி சபை என்பன முக்கியம் பெற்றன. பிரதிநிதிகள் சபையில் 101 பேர் இருந்தனர். 95பேர் தேர்தல் மூலம் தெரிவாகினர். 6 பேர் நியமன அங்கத்தவர்கள்; செனற் சபையில் 30 அங்கத்தவர்கள் இருந்தனர்.

**21.** இலங்கை எந்த ஆண்டு சுதந்திர நாடாக மாறியது?

1948, பெப்ரவரி, 4.

**22.** பின்வரும் காலகட்டங்களுக்கிடையிலான இலங்கையின் ஆட்சிமுறையைச் சுருக்கமாக விபரிக்க.

(i) 1948 பெப்ரவரி 4 தொடக்கம் 1972, மே, 22 வரை.

(ii) 1972, மே 22 தொடக்கம் 1978, செப்டம்பர் 7 வரை.

(iii) 1978 செப்டம்பர் 7 ஆம் திகதிக்குப்பின்னர்.

(i) 1948 — 1972 மே 22 வரை இலங்கையில் நிலவிய ஆட்சிமுறை பாராளுமன்ற ஆட்சியாகும். இது சோல்பரி அரசியலமைப்பைத் தழுவியது. இந்த அரசியலமைப்பில் பிரித்தானிய அரசியின் பிரதிநிதியாக மகாதேசாதிபதி இருப்பார். பிரதிநிதிகள் சபை, செனற் சபை என்ற இரு சபைகள் இருக்கும். மேற்சபை செனற் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள் (காமன்வெல்த் நாடுகள்)

பிரித்தானியாவிடமிருந்து அரசியல் சுதந்திரம் பெற்ற குடியேற்ற நாடுகள் யாவும் விலகிவிடாமல் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பே பொதுநல அரசுக்கூட்டாகும். பொதுநல அரசுக்குட்பட்ட நாட்டு மக்கள் பிரித்தானிய அரசுக்கு விசுவாசமானவர்களாக இருக்க வேண்டும்; இன்று காமன்வெல்த் அமைப்பில் இருந்தாலும், தன்னுதிக்கமும் இறைமையும் கொண்ட குடியரசுகளாகப் பல நாடுகளுள்ளன. உ+ம்: இந்தியா, இலங்கை;

### பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள்:

| | |
|---|---|
| அவுஸ்திரேலியா | திரினிடாட் |
| இந்தியா | நியூசிலாந்து |
| இலங்கை | நைஜீரியா |
| கயாஞு | பாகிஸ்தான் |
| காம்பியா | பொதீஸ்வாஞு |
| கனடா | பார்பேடோஸ் |
| காஞு | பிரித்தானியா |
| கெனியா | மலேசியா |
| சாம்பியா | மால்டா |
| சிங்கப்பூர் | மாலாவி |
| சியாராலியோன் | உகண்டா |
| சைப்பிரஸ் | லெதேத்தோ |
| தன்தானியா | யமேக்கா |

யாகும் இதில் 30 அங்கத்தவர்கள் இருந்தனர். இச்சபைக்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். இச்சபையின் அதிகாரம் குறைவு: பிரதிநிதிகள் சபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இருந்தனர். இதில் 151 பேர் மக்களாலும், 6 பேர் நியமன மூலம் தெரிவாகினர். பிரதமமந்திரி நாட்டின் நிர்வாகத் தலைவராவார்.

(ii) 22 மே 1972 தொடக்கம் 7 செப்டம்பர் 1978 வரை இலங்கையில் நிலவிய ஆட்சிமுறை குடியரசு ஆட்சியாகும்; சுதந்திரமும் தன்னுட்சியும் தன்னுதிக்கமும் கொண்ட குடியரசு ஆகும். குடியரசின் தலைவர் சனுதிபதி; எனினும், பிரதம மந்திரியே அதிகார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடையவர்; மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள்சபை தேசிய சபையாகும் இதில் 157, அங்கத்தவருளர்; 6பேர் நியமன அங்கத்தவராவர்.





(iii) 7, செப்டம்பர் 1978 இலிருந்து இலங்கையின் ஆட்சிமுறை, சனநாயக சோஷலிசக் குடியரசு முறையாகும். இந்த அரசியலமைப்பில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சனாதிபதியே அதிகாரம் படைத்த முதல்வராவார்; மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம் சட்டமாக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்; இலங்கையின் பாதுகாப்பு நிர்வாகம் என்பனவற்றிற்கு சனாதிபதியே பொறுப்பாவார்; சனநாயக சோஷலிசக் குடியரசு தன்னாதிக்கமும் இறைமையும் கொண்ட ஆட்சி அமைப்பாகும்

23. பின்வருவன குறித்து நீர் அறிந்தவற்றைச் சுருக்கமாகக் கூறுக.

(i) பொஸ்தன் தேநீர் விருந்து (ii) ஆர்மாடா
(iii) சத்தியாக்கிரகம் (iv) வாட்டலூயுத்தம்
(v) பாஸ்ரிலே (vi) மக்னாகார்ட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) பொஸ்தன் தேநீர் விருந்து 1767 இல் அமெரிக்கர் மீது பிரித்தானியா இறக்குமதி வரிகளை விதித்தது. இதை அமெரிக்கர் எதிர்த்தபோது, தேயிலைமீது மட்டும் இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. 1773-இல் பொஸ்தன் துறைமுகத்தில், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனிமூலம் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையை, அமெரிக்கர்கள் கடலில் கொட்டித் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்; இதுவே பொஸ்தன் தேநீர் விருந்து எனப்படுகிறது.

(ii) ஆர்மடா— இங்கிலாந்தின் மீது படையெடுத்துச்சென்ற மிகப்பெரிய கப்பல்படை ஆர்மடா ஆகும்; ஸ்பானிய மன்னன் பிலிப் II, 1588 இல் இதனை இங்கிலாந்தின் மீது தாக்க அனுப்பினான்; ஆர்மடாவில் 130 யுத்தக்கப்பல்களும், 19000 வீரர்களும், 8000 மாலுமிகளும் இருந்தனர். இப்படை ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டது.

(iii) சத்தியாக்கிரகம் — ஆங்கிலேயருக்கு எதிராக, மகாத்மா காந்தியினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு சமாதான யுத்தம் சத்தியாக்கிரகம் ஆகும். சத்தியின்றி, இரத்தமின்றி அகிம்சை வழியில் இலட்சியத்தை அடைய சத்தியாக்கிரகம் ஒரு மார்க்கமாக அமைந்தது.

(iv) வாட்டலூ யுத்தம் 1815, யூனில் வாட்டலூ என்ற இடத்தில் நெப்போலியன் படைகளுக்கும் வெலிங்டன் பிரபுவின் படைகளுக்கும் இடையில் போர் நடந்தது. அந்த வாட்டலூ யுத்தத்தில் நெப்போலியன் தோல்வியடைந்தான்.

(v) பாஸ்ரிலே — பாரிஸிலுள்ள மிகப்பழைய சிறைச்சாலைக்கு பாஸ்ரிலே என்று பெயர்; இச்சிறைச்சாலை சித்திரவதைகளுக்குப் பெயர் பெற்றது. பிரான்சியப் புரட்சியின் போது (1789) முதலில் மக்களால் இச்சிறைச்சாலையே தகர்க்கப்பட்டது.

(vi) மக்னகார்ட்டா— ஜோன் மன்னனது ஆட்சிக்காலத்தில், அவன் தனது இஷ்டத்திற்கு வரிகளை விதித்ததால், பிரபுக்களும் மக்களும் அவனை வெறுத்தனர்; 1215-இல் ரன்னி மீட் எனுமிடத்தில் 87 பிரிவுகளைக் கொண்ட மக்னகார்ட்டா எனும் சாசனத்தில் அரசனைக்கையொப்பமிட வைத்தனர்; இதனால் அரசனின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

---

## உலகவரலாறு முக்கிய நிகழ்வு ஆண்டுகள்

கி. மு. 4 யேசுகிறிஸ்து பிறந்தார்.
கி. பி. 570 முகம்மதுநபி பிறந்தார்.
711 அராபிய ஏகாதிபத்திய உச்சகாலம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

715 அராபிய ஏகாதிபத்திய வீழ்ச்சி.
1453 துருக்கியரால் கொன்சாந்தி நோபிள் கைப்பற்றப் பட்டது.
1492 கொலம்பஸ் மேற்கு இந்திய தீவுகளைக் கண்டுபிடித்தார்.
1497 காபோட் நியூபவுன்லாந்தைக் கண்டு பிடித்தார்.
1522 மகெலன் உலகத்தை முதன்முதல் சுற்றி வந்தார்.
1770 தென்கண்டத்தைத்தேடி கப்ரின்குக் பயணம்.
1773 பொஸ்தன் தேநீர் விருந்து.
1776 அமெரிக்க சுதந்திரப் போர்.
1789 பிரான்சியப் புரட்சி ஆரம்பம்; ஜோர்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் ஜனதிபதியானர்.
1804 பிரான்சின் சக்கிரவர்த்தியாக நெப்போலியன் முடி சூடினன்.
1812 நெப்போலியனின் ருசியப்படையெடுப்பு.
1815 வியன்னு உடன்படிக்கை; வாட்டலூ யுத்தம்.
1854 கிறீமின் யுத்தம்.
1861 - 65 அமெரிக்க உள்நாட்டு யுத்தம்.
1863 அமெரிக்காவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டது.
1866 அஸ்ரேரு — புருசியா யுத்தம்.
1869 சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டது.
1870 ஜேர்மனியிடம் பிரான்சின் தோல்வி.
1895 X — கதிர்கள் கண்டுபிடிப்பு.
1899 - 1901 போயர் யுத்தம். (Boer war)
1911 சீனப்புரட்சி.
1912 சீனக்குடியரசு உதயம்.
1914 - 18 முதலாம் உலகமகாயுத்தம்.
1916 ஜுற்லாண்ட் யுத்தம்.
1917 ருசியப் புரட்சி.
1921 ஐரிஸ் சுதந்திர அரசு உதயம்.
1924 லெனினின் மறைவு.
1936 எட்வேர்ட் viii. தான் விரும்பிய பெண்ணை மணப் பதற்காக முடிதுறந்தார்.
1939 - 45 இரண்டாம் உலகமகாயுத்தம்.
1945 ஐக்கிய நாடுகள் தாபனம் உருவாக்கப்பட்டது.
1947 இந்தியா சுதந்திரமடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948 மகாத்மா காந்தி சுடப்பட்டார்;

1949 கம்யூனிஸ்டுகளால் மக்கள் சீனக்குடியரசு உதயம்;

1950 இந்தியா குடியரசானது.

1950 - 53 கொரியா யுத்தம்.

1952 அமெரிக்க ஜனாதிபதியாக ஐசன் ஹோவர் தெரிவு;

1953 ஸ்ராலின் மரணம்; எவரெஸ்டின் உச்சியை ஏறி ஹிலாரி அடைந்தமை;

1954 சௌ - என் - லாய் இந்திய விஜயம் பஞ்சசீலக் கொள்கை வெளியிடப்பட்டது;

1955 பாண்டுங் மாநாடு;

1956 சுயஸ் கால்வாயை எகிப்திய ஜனாதிபதி நாசர் தேசிய மயமாக்கினார்;

1958 எகிப்தும் சிரியாவும் ஒன்றிணைந்து ஐக்கிய அரபுக் குடியரசை (UAR) ஸ்தாபித்தன.

1959 திபெத்தை சீனா கைப்பற்றியது; தலாய்லாமா இந்தியாவிற்குத் தப்பி ஓடிவந்தார்.

1960 ஜோன்; எஃப்; கென்னடி அமெரிக்காவின் ஜனாதிபதியானார்;

1961 மேயர் யூரி. ககாரின் விண்கலத்தில் முதலில் பறந்தார்;

1962 யூ; தான்ட் ஐ. நா. சபையின் செயலாளராதல்.

1963 ஜோன்; எஃப்; கென்னடி கொலையுண்டார்.

1964 நிக்கிட்டா குருசேவ் சோவியத் ருஷியாவின் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

1965 லிண்டன் பி. ஜோன்சன் அமெரிக்க ஜனாதிபதியானார்; வின்சன் சேர்ச்சில் மரணம்;

1966 லூனா-9 என்ற விண்கலம் சந்திரனில் இறங்கியது.

1968 அமெரிக்க நீக்கிரோத் தலைவா மார்டின் லூதர்கிங் கொல்லப்பட்டார். செனட்டர் எட்வேர்ட் கென்னடி கொல்லப்பட்டார்.

1969 அமெரிக்க 37வது ஜனாதிபதியாக றிச்சார்ட் எட்வேர்ட் நிக்சன் தெரிவு; நீல் ஆம்ஸ்ரோங்கும், அல்ட்ரினும் சந்திரனில் முதன்முதல் காலடி வைத்தனர்.

1970 ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் நாசர் மரணம்; பிரான்சின் முன்னாள் ஜனாதிபதி சார்ள்ஸ் டீகால் மரணம்; ஐக்கிய இராச்சியத்தின் பிரதமராக எட்வேர்ட் ஹீத் தெரிவு; இலங்கைப் பிரதமராக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தெரிவு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971 இந்திய, பாகிஸ்தானிய யுத்தம்; வங்காளதேசம் சுதந்திர நாடானது; குருசேவ் மரணம்; பாகிஸ்தானிய ஜனதிபதி Z. A. பூட்டோவை நீக்கிவிட்டு, யக்யாகான் ஜனதிபதியானர்.

1972 வால்ட்கெயிம் ஐ. நா. செயலாளரானர்; சேக் முஜிபூர் றக்மான் வங்காளதேசத்தின் பிரதமரானர்; நேபாள மன்னர் மகேந்திரா மரணம்; அமெரிக்காவின் ஜனதிபதியாக நிக்சன் மீண்டும் தெரிவு.

1973 தென்வியட்னும் யுத்தம் முடிவுற்றது; அராபிய-இஸ்ரேல் யுத்தம் ஆரம்பம்

1974 நிக்சனின் ராஜினமா; போர்ட் அமெரிக்க ஜனதிபதியானர்.

1975 வியட்னும், கம்போடியா, லாவோஸ் என்பன கம்யூனிஸ்டுகளால் கைப்பற்றப்பட்டன; முஜிபூர் ரக்மான் கொலையுண்டார்; சவுதி அராபிய மன்னர் பய்சால் கொலையுண்டார்; சர்வதேச பெண்கள் ஆண்டு.

1976 சௌ-என்-லாய் மரணமானர்; ஐக்கிய இராச்சியப் பிரதமர் ஹறால்ட் வில்சன் ராஜினமா; ஜேம்ஸ் கலகன் புதிய பிரதமராகத் தெரிவு; என்ரபே விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விமானப் பயணிகளை இஸ்ரேலிய துருப்புகள் மீட்பு; சீனப் பிரதமர் மா-சே-துங் மரணம்; ஜிம்மி கார்ட்டர் அமெரிக்க ஜனதிபதியாகத் தெரிவு.

1977 லியோனிட் பிரேசனேவ் ருசியாவின் தலைவராகத் தெரிவு; இலங்கையின் பிரதமராக ஜே. ஆர். ஜயவர்த்தனவும், எதிர்க்கட்சித் தலைவராக அ. அமிர்தலிங்கமும் தெரிவு; எகிப்திய ஜனதிபதி அன்வர் சதாத்துக்கும் இஸ்ரேலியப் பிரதமருக்கும் இடையில் சமாதானப் பேச்சு.

24. (i) முதலாம் உலகப்போர் நடந்த கால அளவு யாது?

(ii) யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகள் எவை?

(iii) போரின் விளைவுகள் என்ன?

(i) 1914 – 1918.

(ii) ஜேர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா என்பன ஒருபுறம்; இவற்றை மத்திய அரசு என்பர். பிரித்தானியா, பிரான்ஸ், ருஷியா, இத்தாலி, சேர்பியா, பெல்ஜியம், ருமேனியா, கிரீஸ், சீன, அமெரிக்கா என்பன மறுஅணி; இவற்றை நேசநாடுகள் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) 2 கோடிபேர் மாண்டனர்; விஷக்காய்ச்சல் பரவியதால் 2 கோடிபேர் மாண்டனர். பல நாடுகளும் நகரங்களும் அழிக்கப்பட்டன. போருக்குப் பயன்படுத்தப்பட்ட வெடிமருந்துகளாலும் அணுக்குண்டு களாலும் மக்களது ஆரோக்கியம் பாதிக்கப்பட்டது. பசி, பட்டினி என்பன நாடுகளிடையே ஏற்பட்டன.

**25. இரண்டாம் உலகப் போரில் அணுக் குண்டுகளால் அழிந்த இரண்டு நகரங்கள் எவை?**

யப்பானிலுள்ள ஹீரோசிமா, நாகசாகி என்பனவாகும்.

**26. ஐ. நா. சபையின் நோக்கங்கள் யாவை?**

சமர்தானத்தை உலகநாடுகளிடையே பாதுகாப்பது; போர்கள் நாடுகளிடையே எழுவதைத் தடுக்கும் அதேவேளை போரினால் ஏற்படக் கூடிய இன்னல்களிலிருந்து மக்களைக் காப்பதும், சமாதானமும் பாது காப்பும் உலக நாடுகளிடையே நிலையாக நிலவ வழிவகுப்பதும்; உலக நாடுகளின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுப்பது; மனித அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது என்பனவாகும்.

**27. ஐ நா. சபையின் அமைப்பு யாது?**

இச்சபை 51 அங்கத்தவர்களுடன் 24 ஒக்டோபர் 1945-இல் அமைக்கப்பட்டது இது பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, பொருளா தார சமூகநலக் கழகம், தர்மகர்த்தா சபை, சர்வதேச நீதிமன்றம், தலைமைச் செயலகம் என்ற பிரிவுகளைக் கொண்ட அமைப்பாகும்; இன்று இதில் 135 அங்கத்துவ நாடுகளுள்ளன.

---

## நாணயங்களின் பெயர்கள்

நாட்டிற்கு நாடு புழக்கத்திலுள்ள நாணயங்களின் பெயர்கள் வேறுபடுகின்றன:

| | | |
|---|---|---|
| இந்தியா | — | ரூபா |
| இலங்கை | — | ரூபா |
| அமெரிக்கா | — | டொலர் |
| அவுஸ்திரேலியா | — | அவுஸ்திரேலிய டொலர் |
| வங்களாதேசம் | — | ராகா (Taka) |
| பர்மா | — | கயாற் (Kyat) |
| கனடா | — | கனேடிய டொலர் |
| எகிப்து | — | எகிப்திய பவுன் |
| பிரான்ஸ் | — | பிராங் (Franc) |
| மேற்கு ஜேர்மனி | — | மார்க் (Mark) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இந்தோனேசியா | — | ருப்பியா (Ruplah) |
| இஸ்றேல் | — | செகெல்ஸ் (Chekels) |
| யப்பான் | — | யென் (Yen) |
| கென்யா | — | சிலிங் |
| தென்கொரியா | — | வொன் (Won) |
| மலேசியா | — | றிங்கிற் (Ringgit) |
| நேபாளம் | — | ரூபா |
| நெதர்லாந்து | — | கில்டர் (Guilder) |
| பாகிஸ்தான் | — | ரூபா |
| நியூகினி (பப்புவா) | — | கினு (Kina) |
| பிலிப்பைன் | — | பேசோ (Peso) |
| தென் ஆபிரிக்கா | — | ருண்ட் (Rand) |
| சுவிர்சலாந்து | — | சுவிஸ் பிறுங் |
| தாய்லாந்து | — | பாற் (Baht) |
| ஐக்கிய இராச்சியம் | — | பவுன்ஸ்ரேலிங் |
| அப்கானிஸ்தான் | — | அப்கானி |
| ஆசெந்தீனு | — | பேசோ (Peso) |
| பிறேசில் | — | குருசெய்ரோ (Cruseiro) |
| சில்லி | — | எஸ்குடோ (Escudo) |
| சீனு | — | யுஎன் (Yuan) |
| செக்கோசெலாவிக்கியா | — | கோறுணு (Koruna) |
| பின்லாந்து | — | மார்க்கா (Markka) |
| ஈராக் | — | டினுர் (Dinar) |
| ஈரான் | — | றியால் (Rial) |
| இத்தாலி | — | லிரு (Lira) |
| யோர்டான் | — | டினுர் |
| லெபனுன் | — | பவுன் |
| பேரு | — | சொல் (Sol) |
| போர்த்துக்கல் | — | எஸ்குடோ |
| துருக்கி | — | லிரு (Lira) |
| சோவியத் ருசியா | — | றூபிள் (Rouble) |

28. பின்வரும் சர்வதேச அமைப்புகள் குறித்து விளக்கம் தருக.

(i) வட அத்திலாந்திக் ஒப்பந்தத் தாபனம்.
(ii) வார்சோ ஒப்பந்தத் தாபனம்.
(iii) அரபுநாடுகளின் சம்மேளனம்.
(iv) சியாட்டோ தாபனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(i)* வட அத்திலாந்திக் ஒப்பந்தத் தாபனம் — இதனை 'நேட்டோ' என்பர்; ருசியாவினதும் அதனைச் சார்ந்த நாடுகளினதும் படையெடுப்புகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, போத்துக்கல், பெல்ஜியம், நோர்வே, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு என்பன அங்கம் வகித்தன. இதுவே நேட்டோ தாபனம்;

*(ii)* வார்சோ ஒப்பந்தத் தாபனம் — வட அத்திலாந்திக் ஒப்பந்தத் தாபனத்திற்கு எதிராக உருவாக்கப்பட்டது கம்யூனிச நாடுகள் இணைந்து உருவாக்கின ருசியா, கிழக்கு ஜேர்மனி, போலாந்து, ருமேனியா, ஹங்கேரி, செக்கோசிலோவாக்கியா ஆகிய நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன. அங்கத்துவ நாடு ஒன்று தாக்கப்படுமானல் ஏனைய நாடுகள் உதவிசெய்து அந்நாட்டைக் காப்பது ஒப்பந்த சாரமாகும்;

*(iii)* அரபுநாடுகளின் சம்மேளனம் — துருக்கி, ஈராக், ஈரான், பாகிஸ்தான் என்பன தமது பாதுகாப்புக்காக ஒன்றிணைந்து அரபுநாடுகளின் சம்மேளனத்தை அமைத்துக்கொண்டன.

*(iv)* சியாட்டோ தாபனம் — கம்யூனிஸ்ட் நாடுகள் தம்மைத் தாக்கும் என அஞ்சி அவுஸ்திரேலியா, நியூசிலாந்து பசுபிக்கிலுள்ள சில நாடுகளும் பரஸ்பர உதவி அளிக்கும் நோக்குடன் தென்கிழக்காசிய உடன்படிக்கை ஸ்தாபனம் (சியாட்டோ) என்பதை அமைத்துக்கொண்டனர்;

**உலகநாடுகள் சிலவற்றின்**
**பாராளுமன்றங்களின் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| இலங்கை | — | பாராளுமன்றம் |
| அப்கானிஸ்தான் | — | சோரு (*Shora*) |
| பிரித்தானியா | — | பாராளுமன்றம் |
| சீனு | — | தேசிய மக்கள் காங்கிரஸ் |
| டென்மார்க் | — | போகெற்றிங் (*Folketing*) |
| ஹங்கேரி | — | தேசிய சபை (*National Assembly*) |
| இந்தியா | — | லோக்சபா & ராஜ்ய சபா |
| ஈரான் | — | மஜ்லிஸ் (*Majlis*) |
| அயர்லாந்து | — | டயல் (*Dail*) |
| யப்பான் | — | டயற் (*Diet*) |
| சோவியத்ருசியா | — | சுப்பிரீம் சோவியத் |
| சுவீடன் | — | றிக்ஸ்டாக் (*Riksdag*) |
| ஐக்கிய அமெரிக்கா | — | காங்கிரஸ் (*Congress*) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. பின்வருவன பற்றி நீர் அறிந்தவற்றைச் சுருக்கமாக விபரிக்க.

(i) மார்ஷல் திட்டம் (ii) கொழும்புத் திட்டம்
(iii) ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம்
(iv) ஒபெக் நிறுவனம் (v) செஞ்சிலுவைச் சங்கம்

(i) மார்ஷல் திட்டம் — இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்ததும் போரின் விளைவாக உலக நாடுகள் பல சீரழிந்திருந்தன; அவற்றிற்கு உதவுவதற்காக அமெரிக்க இராச்சியச் செயலாளரான ஜோர்ஜ் காட்லெட் மாாஷல் என்பார் மீட்சித்திட்டம் ஒன்றைத் தயாரித்தார். இத்திட்டப்படி சீரழிந்த நாடுகளுக்கு ஏனைய நாடுகள் உதவ முன்வந்தன; வெளிநாட்டுதவியின் ஆரம்பமே மார்ஷல் திட்டம்.

(ii) கொழும்புத் திட்டம் — தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பொதுநலவமைப்பு நாடுகளால் 1950இல் வகுக்கப்பட்ட, உதவித்திட்டமே கொழும்புத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் தொழில் துறையில் பின்தங்கியிருந்த அங்கத்துவநாடுகளுக்குக் கடன், தொழில்நுட்ப வசதி என்பன வழங்கப்படும்.

(iii) ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் — பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, பெல்ஜியம், லக்சம்பேர்க், நெதர்லாந்து, இத்தாலி ஆகிய ஆறு நாடுகள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய ஒருமைப்பாட்டுச் சமூகமே இதுவாகும்; பொருளாதார ஒருமைப்பாட்டின் மூலம் அரசியல் ஒருமைப்பாட்டை உருவாக்குவதே இந்த அமைப்பின் நோக்கமாகும்; 1950-இல் உருவாக்கப்பட்டது. இந்த ஆறு நாடுகளும் தமக்குள் சுங்க வரிகளை நீக்கி, தடையற்ற வர்த்தகச் சட்டத்தை ஏற்படுத்தியுள்ளன.

(iv) ஒபெக் நிறுவனம் — பெற்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளான குவைத், ஈரான், ஈராக், லிபியா, வெனிசுவெலா ஆகிய நாடுகள் ஒன்றுசேர்ந்து இந்த நிறுவனத்தை உருவாக்கின; இந்த நிறுவனம் தான் விரும்பியவாறு பெற்ரோலியத்தின் விலையை நிர்ணயித்து வருகின்றது.

(v) செஞ்சிலுவைச் சங்கம் — போரில் காயமடைந்து குற்றுயிராகக் கிடக்கும் போர் வீரர்களுக்கும் மக்களுக்கும் பாகுபாடின்றி உதவுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு சங்கமாகும்; இதனை 1863 இல், ஹென்றி டுனன்ட் என்பவர் உருவாக்கினார். வெள்ளைத் துணியில் செஞ்சிலுவை பதிக்கப்பட்ட சின்னமே இச்சங்கத்தின் சின்னமாகும். அராபிய நாடுகளில் இச்சங்கத்தின் கொடியில் இளம் பிறை பொறிக்கப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**30. நோபல் பரிசு (*Nobel Prizes*) என்பது யாது?**

அல்பிரட் பேர்னுட் நோபல் என்ற சுவீடன் தேச அறிஞர் 1896 இல் மரணமானுர். இவர் வெடிமருந்துகளைக் கண்டுபிடித்துப் பெரும் பணக்காரரானுர்; அப்பணத்தை மக்களின் நன்மைக்காகத் தொண்டு செய்வோரை ஊக்குவிக்கப் பரிசுகள் வழங்க எண்ணங் கொண்டார்; வருடாவருடம் 1901 இலிருந்து பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், உலகசமாதானம் ஆகியதுறைகளில் வியத்தகு சேவை செய்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. ஒருபரிசின் பெறுமதி 1,450,00 டொலர்களாகும்.

**31. ஆள் வீத வருமானம் என்ருல் யாது?**

ஒரு நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தை, அந்த நாட்டின் மொத்தக் குடித்தொகையால் பிரிக்க வருவதே ஆள்வீத வருமானம் (தலாவருமானம்) ஆகும்.

**32. இரு பக்க வர்த்தகம் என்ருல் என்ன?**

ஒரு நாடு இன்னெரு நாட்டுடன் ஒப்பந்த அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுமாயின் அவ்வாருன வர்த்தகத்தினை இருபக்க வர்த்தகம் எனலாம். உதாரணமாக, இலங்கைக்கும் மக்கள் சீனக் குடியரசுக்கும் இடையே நடைபெறும் வர்த்தகத்தினை இருபக்க வர்த்தகம் எனலாம் சீனுவிடமிருந்து நாம் அரிசியை வாங்கிக் கொண்டு, றப்பரை ஏற்றுமதி செய்து வருகின்ருேம்.

**பணவீக்கம்**

யுத்தம், நெருக்கடி போன்ற அசாதாரண காலங்களில் நாட்டில் பணப் புழக்கத்தை அதிகரிப்பதன் பொருட்டு அதிகமான கரன்ஸி நோட்டுகளை அச்சிடுவது வழக்கம். அதிகப் புழக்கம் இருப்பதால், பொருட்களுக்கு அதிக விலைவாசிகள் ஏறுகின்றன. இவ்விதம் அதிக கரன்சி நோட்டுகள் செலவாணியில் இருப்பதன்மூலம் ஏற்படும் நிலைமைக்குப் பணவீக்கம் என்று பெயர்;

**33. பலபக்க வர்த்தகம் என்ருல் என்ன?**

உலக நாடுகள் எவ்வித கட்டுப் பாடுமின்றி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலையே பலபக்க வர்த்தகம் என்பர்.

**34. உணவு உற்பத்திக்கு உதவும் உலகத் தாபனங்கள் எவை?**

1. உலக உணவு விவசாய நிறுவனம். (*FAO*)
2. உலக உணவு வேலைத்திட்டம்; 3. கொழும்புத் திட்டம்;
4. உலக வங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**35.** *$H_1$, $IR_8$, $ADT_{27}$, $BG_{11}$* என்பன யாவை?

புதிய நெல்லினங்கள்.

**36.** ஒலிம்பிக் ஆட்டங்கள் என்றால் என்ன?

பண்டைய கிரேக்கமக்கள், ஒலிம்பியா என்னும் இடத்தில் ஜூஸ் என்னும் தேவதைக்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை விழா எடுத்தார்கள். இந்த விழாவில் விளையாட்டுப் போட்டிகளும் நடந்தன; இவையே பின்னர் ஒலிம்பிக் ஆட்டங்களாக மாறின. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை உலகநாடுகள் பலவற்றினதும் விளையாட்டு வீரர்கள் ஓரிடத்தில் கூடி, போட்டியிடுவார்கள். கடைசி விழா 1980 இல் மொஸ்கோவில் நடந்தது.

**37.** பின்வரும் வார்த்தைகள் பயன்படுத்தப்படும் விளையாட்டுகள் எவை?

(i) *Drop, Let, Love All, Duce, Samash.*
(ii) *Blocking, Holding, Jump Ball, Multiple Throws, Pivot.*
(iii) *Baulk Line, Break, Cannon, Hazard Pot.*
(iv) *Bishop, Castle, Checkmate, Knight, Pawn, King, Queen.*
(v) *Corner Kick, Goal Kick, Penalty Kick, Throw in.*
(vi) *Deuce, Fault, Let, Love, Net, Volley.*
(vii) *Heave, Holding, Point, Love, Service*
(viii) *Legbreak, Legbye, Bowling, Crease, Over, Out, Wicket.*

(i) பட்மின்ரன் (*Badminton*) (ii) கூடைப்பந்தாட்டம் (*Basket Ball*) (iii) பிலியட் (*Billiads*) (iv) சதுரங்கம் (*Chess*). (v) கால்ப்பந்தாட்டம் (*Foot Ball*) (vi) ரென்னிஸ் (*Tennis*) (vii) கரப்பந்தாட்டம். (*Volley Ball*) (viii) கிரிக்கட் (*Cricket*).

**38.** பின்வரும் இடங்கள் எந்த விளையாட்டுகளுக்குச் சிறந்தன?

(i) புருக்லாண்ட். (ii) புருக்லின். (iii) யங்கிஸ்ரேடியம். (iv) மெல்போன், லீட்ஸ். (v) டொன்காஸ்ரர். (vi) ஹூலிங்ரன். (vii) விம்பில்டன்.

(i) கால்பந்தாட்டம். (ii) *Baseball.* (iii) குத்துச் சண்டை. (iv) கிரிக்கட். (v) குதிரை ஓட்டம். (vi) போலோ (*Polo*) (vii) ரென்னிஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**39.** ஒலிம்பிக் வளையங்கள் ஐந்தினதும் விளக்கம் யாது?

அவை ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய ஐந்து கண்டங்களையும் குறிக்கின்றன; உலக மக்களது நட்பைக் குறிக்கின்றன; ஒவ்வொருவளையமும் ஒவ்வொரு நிறம் — நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு.

**40** நமது தேசிய விளையாட்டுகள் சிலவற்றைக் கூறுக:

கிளித்தட்டு, சடுகுடுகுடு, தாயம், சதுரங்கம், கிட்டி, கோலாட்டம்

---

அத்தியாயம்: ஏழு

# இன்றைய பிரமுகர்கள்

## 1. அரசியல் தலைவர்கள்

| நாடு | பதவி | பெயர் |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | ஜனாதிபதி | றொனல்ட் றீகன் |
| சோவியத் ருஷியா | ஜனாதிபதி | லியோனித் பிரெஸ்னேவ் |
| பொலீவியா | ஜனாதிபதி | செல்சோ ரொறெலியோ வில்லா |
| போலாந்து | ஜனாதிபதி | ஸ்ரனிஸ்லோகனியா |
| ஐக்கிய இராச்சியம் | மகாராணி | எலிசபெத் |
| | பிரதமர் | மார்கிரெட் தச்சர் |
| சிம்பாவே (றொடீசியா) | பிரதமர் | றொபேட் முக்காபே |
| எல்சல்வடோர் | ஜனாதிபதி | J. N. டுவாற்றே |
| சூடான் | ஜனாதிபதி | ஜபார் நிம்மெய்ரி |
| இந்தியா | பிரதமர் | இந்திராகாந்தி |
| வத்திக்கான் | தலைவர் | போப் ஜோன்போல் II |
| மேற்கு ஜேர்மனி | பிரதமர் | ஹெல்மட் ஸ்க்ட்மிட் |
| லிபியா | ஜனாதிபதி | முயாமர் கடாபி |
| இஸ்ரேல் | பிரதமர் | M. பெகின் |
| தென்கொரியா | ஜனாதிபதி | சுன் - டு - ஹுவான் |
| ஈரான் | தலைவர் | ஆயத்துல்லா கொமேய்னி |
| பாகிஸ்தான் | ஜனாதிபதி | சியா - உல் - ஹக் |
| ஸ்பெயின் | பிரதமர் | ஜோர்ஜ் றவிஸ் |
| பிரான்ஸ் | ஜனாதிபதி | பிரான்கோயிஸ் மிற்றரண்ட் |
| அவுஸ்திரேலியா | பிரதமர் | மல்கொல்ம் பிரேசர் |
| கட்டார் | மன்னர் | பின்ஹமாட் அல்தானி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இந்தோனேசியா | ஜனாதிபதி | சுகாட்டோ |
| பாலஸ்தீனம் | தலைவர் | யாசீர் அரபாத் |
| டென்மார்க் | பிரதமர் | அன்கர் யோகென்சென் |
| நோர்வே | பிரதமர் | G. H. புருண்ட்லண்ட் |
| நெதர்லாந்து | பிரதமர் | அன்ட்றியஸ் வான் அக்ட் |
| கிறிஸ் | ஜனாதிபதி | பாபன்ட்ரூ |
| போர்த்துக்கல் | பிரதமர் | பிரான்சிஸ்கோபின்ரோ பல்செமோ |
| ஆசெந்தினு | ஜனாதிபதி | வியோலா |
| நியூசிலாந்து | பிரதமர் | றொபேட் மல்டூன் |
| இத்தாலி | பிரதமர் | கியோவன்னி ஸ்பாடோலினி |
| கனடா | பிரதமர் | P. E. ரூடியோ |
| யப்பான் | பிரதமர் | சென்கோ சுசுக்கி |
| மலேசியா | பிரதமர் | மகாதீர் மொகமட் |
| யமேக்கா | பிரதமர் | எட்வேர்ட் சீகா |
| எதியோப்பியா | மன்னர் | மெங்கிஸ்து |
| ஈராக் | ஜனாதிபதி | சடாம் ஹுசைன் |
| சவுதி அரேபியா | மன்னர் | காலித் |
| மொரோக்கோ | மன்னர் | ஹசன் |
| மெக்சிக்கோ | ஜனாதிபதி | ஜோஸ் லோப்பெஸ் போர்டில்லோ |
| இலங்கை | ஜனாதிபதி | ஜே. ஆர். ஜயவர்த்தன |
| | பிரதமர் | ஆர். பிரேமதாசா |
| சிரியா | ஜனாதிபதி | ஹாபெஸ் அசாட் |
| நேபாளம் | மன்னர் | பிரேந்திரா |
| சீன | பிரதமர் | குவா-குவா-பெங் |
| எகிப்து | ஜனாதிபதி | மொபாரக். |
| சாம்பியா | ஜனாதிபதி | கென்னத் கவுண்டா |
| தன்சானியா | ஜனாதியதி | யூலியஸ் நயேரேரே |
| கியூபா | ஜனாதிபதி | பீடல் காஸ்ட்ரோ |
| யோர்டான் | மன்னர் | ஹுசைன் |
| தென்னபிரிக்கா | பிரதமர் | ஜோன் வோஸ்ரர் |
| வங்களா தேசம் | ஜனாதிபதி | அப்துஸ் சத்தார் |
| அங்கோலா | ஜனாதிபதி | ஜோஸ் எட்வார்டோ |
| அயர்லாந்து | பிரதமா | கரெட் பிட்ஸ் ஜெரால்ட் |
| சிங்கப்பூர் | ஜனாதிபதி | சி. வி. தேவன் நாயர் |

## 2. முக்கிய பிரமுகர்கள்

அலெக்சாண்டர் ஹெய்க் — அமெரிக்க ராஜாங்கச் செயலாளர்;
அன்ட்ரே குரோமிகோ — சோவியத் வெளிநாட்டு அமைச்சர்;
டயானு — பிரித்தானிய இளவரசர் சார்ள்சின் மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொபி சாண்டஸ் — வட அயர்லாந்தில் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த பாராளுமன்ற உறுப்பினர்.

மொகமட் அலி — உலகின் அதிபாரக் குத்துச் சண்டை வீரன்; காசியஸ் கிளே இவரது புதுப்பெயர்.

நீல் ஆம்ஸ் ரோங் — சந்திரனில் முதன் முதல் காலடி வைத்த விண்வெளி வீரர்.

சத்தியத் ஜித்ரே — இந்திய சினிமாத் தயாரிப்பாளரும் டைரக்டரும் ஆவார்; உலகப் புகழ்பெற்றவர்.

வால்ட் ஹெய்ம் — ஐ நா. சபையின் பொதுச் செயலர்ளராக இருந்தவர்.

பெரஸ்டி கியூலர் — ஐக்கிய நாடுகள் தாபனத்தின் இன்றைய பொதுச் செயலாளர்; பேருநாட்டவர்.

யுன்கோ தபேய் — எவரெஸ்டில் முதன்முதல் ஏறிய யப்பானியப் பெண்மணி.

தேரேசா அம்மையார் — யூகோசிலாவியாவில் பிறந்த கன்னியாஸ்திரி; 20 ஆண்டுகளாக இந்தியாவில் வாழ்ந்து அனாதைகளுக்காகப் பாடுபட்டு வருகிறார். உலக நாடுகளால் போற்றப்படுபவர்.

எம் ஜி. இராமச்சந்திரன் — தமிழ்நாட்டின் முதலமைச்சர்; சிறந்த சினிமா நடிகர்.

அ. அமிர்தலிங்கம் — இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க் கட்சித் தலைவர்.

காமினிதிசநாயக்கா — இலங்கையின் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர்.

லலித் அத்துலத்முதலி — இலங்கையின் வர்த்தக, கப்பற் போக்குவரத்து மந்திரி.

காமினி ஜயசூரியா — இலங்கையின் சுகாதார அமைச்சர்.

ரொனி டி மெல் — இலங்கையின் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

திஸ்ஸ வீரதுங்கா — இலங்கையின் இராணுவத் தளபதி - மேஜர் ஜெனரல்.

அனா செனவிரத்ன — இலங்கையின் பொலீஸ்மா அதிபர்.

பெஸ்டஸ் பெரேரா — இலங்கையின் கடற்றொழில் அமைச்சர்.

எம். ஆர். தாசிம் — சவுதி அரேபியாவுக்கு நியமிக்கப்பட்டுள்ள முதலாவது இலங்கைத் தூதுவர்.

சேனக சேனநாயக்க — சிங்கள ஓவியர்; இளைஞர்.

நவரத்தினசாமி — பாக்குநீரிணையை முதன்முதல் நீந்திக் கடந்த நீச்சல் வீரர்.

எஸ். தொண்டைமான் — கிராமியத்துறை அமைச்சர்.

செ. இராசதுரை — பிரதேச, தமிழ்மொழி அமுலாக்க அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. உலகக் குடிப்பெருக்க அச்சுறுத்தல்

உலகின் சனத்தொகை நாளாந்தம் அதிகரித்தே வருகின்றது. கி. பி. 1600 அளவில் 40 கோடிகளாக இருந்த சனத்தொகை, இன்று 436 கோடிகளாக அதிகரித்திருக்கின்றது. இந்த எண்ணிக்கை 2000 ஆண்டளவில் 650 கோடிகளாக அதிகரிக்க இருக்கின்றது. இன்றைய அதிகரிப்பு வேகத்தின் அடிப்படையை நோக்கினால் ஒவ்வொரு 12 வருடத்திலும் 100 கோடி வீதம் சனத்தொகை அதிகரித்து வந்துள்ளது. ஒவ்வொரு 35 வருடத்திலும் உலக சனத்தொகை இரண்டு மடங்காகப் பெருகும் எனவும் மதிப்பிட்டுள்ளனர். இக்குடிப் பெருக்கம் உலக நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாகவுள்ளது,

சனப் பெருக்கத்தின் அளவு வியப்பிற்குரியது. ஒவ்வொரு மணி நேரத்திலும் 9000 குழந்தைகள் பிறக்கின்றன. அதேவேளை ஒவ்வொரு மணிநேரத்திலும் 3000 மக்கள் இறக்கின்றனர். ஆகவே, ஒவ்வொரு மணி நேரமும் 6000 மக்கள் வீதம் சனத்தொகை அதிகரித்து வருகின்றது. இவ்வகையில் ஒரு நாளுக்கு 1,40,000 மக்களும் ஓராண்டிற்கு ஏறத்தாழ $5\frac{1}{4}$ கோடி மக்களும் அதிகரித்து வருகின்றனர்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் குடிப்பெருக்க வீதம் 2% உக்கும் குறைவாகும்; குறைவிருத்தி நாடுகளில் 2% – உக்கும் அதிக வீதத்திலும் சனத்தொகை பெருகி வருகின்றது.

இறப்பு வீதம் குறைந்து பிறப்பு வீதம் அதிகரித்தமையே சனப்பெருக்கத்திற்கு முதற் காரணமாகும். நவீன மருத்துவ, சுகாதார விருத்திகளால் இன்று இறப்போர் தொகை குறைவடைந்துள்ளது. மோசமான கொள்ளை நோய்கள் (மலேரியா, பிளேக்), மிகமோசமான சுகாதார நிலைமைகள், பஞ்சம், போர்கள், இயற்கை அழிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன இன்று எவ்வளவோ குறைந்தும், கட்டுப்படுத்தப்பட்டுமுள்ளன. அதனால், உலக நாடுகளில் இறப்பு வீதம் குறைந்து, பிறப்பு வீதம் அதிகரித்து வருகின்றது.

உலகில் அதிகரித்து வரும் சனத்தொகைக்கும், பொருளாதார அபிவிருத்திக்குமிடையில் ஒரு சமநிலை காணப்படவில்லை. பொருளாதார அபிவிருத்தியை மீறியதாகச் சனத்தொகை அதிகரிப்பு இன்று காணப்படுகின்றது. அதனால், பின்வரும் குடிசனப் பிரச்சினைகள் உருவாகியுள்ளன; (i) உணவுப் பிரச்சினை, (ii) தொழிற்பிரச்சினை, (iii) வதிவிடப் பிரச்சினை. iv) சமூக நலன் சேவைகளில் ஏற்பட்ட பிரச்சினைகள்.

குடிசனப் பெருக்கத்தினால் இன்றைய உலகம் எதிர்நோக்கும் மிக முக்கியமான பிரச்சினை உணவுப் பிரச்சினையாகும். ஆபிரிக்க, ஆசிய நாட்டு மக்கள் வறியவர்கள்; போதிய உணவின்மையும் ஊட்டமான உணவின்மையும் இந்நாட்டு மக்களைப் பெரிதும் பாதித்துள்ளன. மேலும், வேலையில்லாத் திண்டாட்டம் குறை விருத்தி நாடுகளில் அதிகளவில் தலை தூக்கியுள்ளது. அதனால் உள்நாட்டுக் கலவரங்கள், படித்த இளைஞர்களிடையே விரக்தி என்பன காணப்படுகின்றன. மூளைசாலிகள் தம் நாட்டை விட்டு வெளியேறுவதும், மனித வலு வெளியேறுவதும் உள்நாட்டில் ஏற்பட்ட வேலையில்லாமையாலும் ஊதியக்குறைவினாலுமாகும்.

மக்கள் தொகை அதிகரிப்பினால் வதிவிடப் பிரச்சினைகள் நகரப்புறங்களில் பெரிதும் தலைதூக்கியுள்ளன. வானளாவிய மாடிக்கட்டிடங்கள் கூட, வதிவிடப் பிரச்சினைகளைத் தீர்க்கப் போதுமானவையல்ல. கல்வி வசதி, வைத்திய வசதி, சுகாதார வசதி, போக்குவரத்து வசதி, தபால் தந்தி வசதி, பொழுது போக்கு வசதி என்ற சமூக நலன் சேவைகளை மக்களுக்கு அமைத்துக் கொடுக்கமுடியாது, இன்று பல நாடுகள் திணறுகின்றன. இவ்வாறான குடிப்பெருக்க அச்சுறுத்தல்களைத் தீர்த்து வைக்க, குடிப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதுடன், பொருளாதார வளத்தையும் அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. இந்து சமுத்திரச் சமாதானப் பிராந்தியம்

இந்து சமுத்திரத்தில் அண்மைக் காலத்தில் வல்லரசு நாடுகள் படைத்தளங்களை அமைப்பதிலும், தங்கள் யுத்தக் கப்பல்களை நிலை நிறுத்துவதிலும் கூடிய கவனம் செலுத்தி வருகின்றன. வல்லரசு நாடுகளின் இத்தகைய நடவடிக்கைகளால் இந்து சமுத்திர நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், வங்காள தேசம், இலங்கை, கிழக்கிந்தியத் தீவுகள் முதலான நாடுகளின் சமாதானம் பாதிக்கப்பட்டு, அமைதி குலைந்து விடுமென இந்நாடுகள் அச்சம் தெரிவிக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபையில், இந்து சமுத்திரத்தைச் சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென முதன்முதல் இலங்கையே குரல் எழுப்பியது; அதனை ஆதரித்து கூட்டுச் சேரா நாடுகள் வாக்களித்தன.

ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா பிரான்ஸ், ருஷியா முதலிய நாடுகள் இந்து சமுத்திரப்பிரதேசத்தில் படைத்தளங்களைக் கொண்டிருக்கின்றன. அல்லது அவை ஆயுதங்கள் நிறைந்த கப்பற் படைகளை இயக்கிவருகின்றன. இந்த நாடுகளிடையே போர் மூளுமாயின், இந்து சமுத்திரத்தில் நிலைகொண்ட இக்கப்பல்களால் பாதிப்படைவன ஆசியாவும் ஆபிரிக்காவுமேயாகும்; அமெரிக்காவும் ஐரோப்பாவுமல்ல. சண்டைபிடிப்பன அவை; பாதிப்படைவன நாமா? எனவேதான் இந்துசமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக இருக்க வேண்டியது அவசியமாகிறது; வல்லரசுகள் தங்கள் இராணுவத்தளங்களை அத்திலாந்திக் சமுத்திரத்திலோ, பசுபிக் சமுத்திரத்திலோ தங்கள் நாடுகளுக்கு அருகில் அமைத்துக் கொள்வதை விடுத்து, இந்து சமுத்திரத்தில் அமைத்துக் கொள்ள முயல்வது. இந்து சமுத்திர நாடுகளுக்கு ஏற்றதாகவில்லை.

அராபிய–இஸ்ரேலிய யுத்தத்தின் பின்னர் (1973) அமெரிக்காவும் பிரித்தானியாவும் இந்து சமுத்திரத்தில் இராணுவத்தளங்களை அமைப்பதில் கவனம் செலுத்தின; ஐ.நா.சபையில் நிறைவேற்றப்பட்ட சமாதானப் பிராந்

திய யோசனையையும் மெதுவாகக் கைவிட்டன. இலங்கைக்குத் தென்மேற்கே 1200 மைல் தூரத்தில் அமைந்துள்ள டியாகோ காசியா (DIEGO GARCIA) என்ற தீவில், 20 மில்லியன் டொலர் செலவில் பெரும் இராணுவ, கடற்படைத்தளத்தை அமெரிக்கா அமைத்துக் கொண்டது. அதனைவிட இந்து சமுத்திரத்தில் பாரென், டியி போற்றி (Djibouti), கோகஸ்தீவு, அவுஸ்திரேலிய வடமேற்கு முனை என்பனவற்றிலும் அமெரிக்கா தனது படைத்தளத்தை வலிமைப்படுத்திக்கொண்டது. பாகிஸ்தான், தாய்லாந்து, சிங்கப்பூர், சவுதி அரேபியா என்பன அமெரிக்கப் போர் விமானங்கள் தம் நாடுகளில் தங்கிச் செல்ல உடன்பட்டுள்ளன. பிரித்தானியாவுக்குச் சொந்தமான இந்துசமுத்திரத் தீவான ஷெசெல்ஸ் (Seychells) தீவிலும் அமெரிக்கா தனது வலிமையான படைத்தளத்தை அமைத்துக்கொண்டுள்ளது. பிரித்தானியா தென்னுபிரிக்க சிமித்நகரம், ஷெசெல்ஸ், மோறீஷியல் என்பனவற்றில் படைத்தளத்தை அமைத்துக் கொண்டுள்ளது. ரியூனியன் (Reunion), டியாகோசுவாரெஸ் (Diego Suarez) என்பனவற்றிலும், இந்து சமுத்திரத் தீவுகள் சிலவற்றிலும் பிரான்ஸ் தனது படைத்தளங்களைக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் சோவியத் ருசியாவின் கவனமும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் திரும்பியுள்ளது; ஆனால், இந்து சமுத்திரத்தில் ருசியாவிற்குப் படைத்தளமில்லை. ஆனால், ருசியாவின் நீர்மூழ்கிக் கப்பல்களும், போர்க்கப்பல்களும் இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் திரிகின்றன. சுயெஸ் கால்வாய் மீண்டும் திறக்கப்பட்டதால், ருசியக்கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் நிலை கொள்வது சாதகமாகிவிட்டது. இந்து சமுத்திர நாடான ஆப்கானிஸ்தானில் இன்று ருசியாவே ஆதிக்கம் செலுத்துகிறது. எனவே, வருங்காலத்தில் ஆப்கானிஸ்தானில் ருசியா இராணுவப்படைத்தளம் ஒன்றினை அமைப்பதில் சிரமமில்லை.

எனவே இன்று இந்து சமுத்திரப்பிரதேசம் தனது அமைதியை இழந்து வருகின்றது. வல்லரசுகளின் இராணுவ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படைத் தளங்கள் என்ற எரிமலைகளின் நடுவே, அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் இந்து சமுத்திர நாடுகள் உள்ளன. அவை தொடர்ந்து இந்து சமுத்திரம் சமாதானப் பிராந்தியமாக இருக்கவேண்டும் எனக் குரல் எழுப்புகின்றன.

## 3. கல்வித்துறை வெள்ளை அறிக்கை

இலங்கையின் இன்றைய கல்வி முறையில் புகுத்த வேண்டிய சீர்திருத்தங்களுக்கான ஆலோசனைகளைக் கல்வித் துறை வெள்ளை அறிக்கை எடுத்துரைக்கின்றது. பெரும்பாலானவர்களுக்குக்கிடைத்த பொது நூற்கல்வியானது அவர்களது மனப்பான்மைகளை விரிவாக்கியுள்ளது. ஆனால் அவர்களது ஆக்கத்திறனையும் வருமானங்களையும் அதிகரிக்கத் தவறிவிட்டது. மாணவர்கள் மேன் மேலும் ஒரேபயிற்சி நெறியையே பின்பற்றியதால்வேலையற்ற இளைஞர் தொகை வரவரப் பெருகியது. எனவே, இலங்கையின் கல்விமுறையில் மாற்றங்கள் செய்ய வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்காக உருவாக்கப்பட்டதே கல்வித்துறை வெள்ளை அறிக்கை ஆகும்.

முகாமையியல், விஞ்ஞானம், தொழில் நுட்பவியல் ஆகியவற்றுக்குக் கல்வி வெள்ளை அறிக்கை முக்கியத்துவம் அளித்துள்ளது. நூற்கல்வியோடு தொழின்முறைக்கல்விக்கும் பயிற்சி நெறிகளுக்கும் இந்த அறிக்கை முக்கியம் அளிக்கிறது. எமது சமூகத்தின் பொருளாதார; சமூக ஒழுக்க, அரசியல் தேவைகளை நிறைவேற்றுதல்; கல்வியையும் பயிற்சியையும் தொழிற்சந்தைக்குப் பொருந்தத் தொடர்பு படுத்தல்; கற்கை உலகிலிருந்து தொழில் உலகிற்கான நிலை மாற்றத்தைச் சீராக்கல், மக்கள் தத்தம் திறமைக்குத் தக்க கல்வியில் முன்னேற உதவுதல்; கல்வியை வாழ் நாள் முழுவதற்குமான ஒரு செயன் முறையாக்குதல்; அளவு சார்ந்த பெறுபேறுகளை அடைந்த இடத்தில் பண்பு சார்ந்த இயல்புகளை வலியுறுத்துதல் என்பன இந்தக்கல்வி வெள்ளையறிக்கையின் நோக்கங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித்துறை வெள்ளை அறிக்கையில் கல்வி இரு கட்டங்களில் அமையும் எனக் கூறப்பட்டுள்ளது. அவை:

1. **பொதுக்கல்வி**—5 வயதில் ஆரம்பித்து 11 ஆண்டுகள் கற்றல்; க.பொ.த. தொடக்கப் பரீட்சையாக அமையும்.

2. **சிறப்புத் தேர்ச்சிக்கல்வி**—சமூகத்தின் தேவைக்கு ஏற்ப நூற் சார்பு, தொழினுணுக்கம், தொழின்முறை. உயர் தொழில், விவசாயம் முதலிய பலவகைக் கல்விக்கும் பயிற்சிக்குமான வாய்ப்புகள். இதன் பல கட்டங்களில் தகைமைகள் பெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கும்.

கல்வித்துறை வெள்ளை அறிக்கையில் முன் வைக்கப் பட்டுள்ள பிரதான ஆலோசனைகளை நோக்குவோம்.

1. **பொதுக்கல்வி**—பொதுக்கல்வி முதலாம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரையில் அமையும். முதல்மொழி, சமயம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, அழகியற்கல்வி, வாழ்க்கைத் தொழிற்றிறன்கள், உடனலவியலும் உடலியற்கல்வியும் ஆகியனவற்றைப் பாடங்களாகக் கொண்டிருக்கும்.

2. **பல்கலைக்கழகப் புகுமுகம்** - பாடசாலையின் 12 ஆம் 13 ஆம் தரங்கள் பல்கலைக்கழகப் புகுமுகத் தரங்களாக அமையும். அதன்படி 13 ஆம் தரமுடிவில் நடைபெறும் பரீட்சை பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையாகும். பாடசாலைப் பரீட்சார்த்திகள் மாத்திரமே பல்கலைக்கழகப் புகுமுகப்பரீட்சை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

3 **பாடசாலைக்குழுக்கள்** (கொத்தணிகள்)-இப்போதுள்ள சுமார் 9500 பாடசாலைகளும் ஏறத்தாழ 1000 பாடசாலைக்குழுக்களாகத் தொகுக்கப்படும். ஒவ்வொரு குழுவிலும் சுமார் 10 பாடசாலைகளும், சுமார் 3000 மாணவர்களும் அடங்குவர். ஒரு குழுவுக்குரிய சகல வளங்களும் வசதிகளும் அக்குழுவில் அடங்கிய பாடசாலைகள் அனைத்திலுமுள்ள எல்லா மாணவர்களாலும் பொதுவாகப் பகிர்ந்து கொள்ளப்படும்; ஒரு பாடசாலைக்குழுவுக்கு ஒரு பிரதான அதிபர் இருப்பார்; ஒரு ஆலோசனைக்குழு இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 பல்கலைக்கழகங்கள்-நூற்கல்வித்துறையில் தேசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பல்கலைக் கழகங்கள் மேம்பாட்டு மத்திய நிலையங்களாக அமையும். கலைத்துறை மாணவர்க்கும் விஞ்ஞானத்துறை மாணவர்க்கும் உள்ள இடைவெளியைக்குறைக்குமுகமாக, கலைத்துறை மாணவர் ஒருவர் விஞ்ஞான பாடத்தைக் கற்க அனுமதிக்கப்படுவார், திறந்த பல்கலைக் கழகமும் இயங்கி வரும்.

5. ஆசிரியர்களும் பாடவிதானமும் - ஆசிரியர்கள் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். ஆசிரியத் தொழிலுக்குக் குறைந்தது க.பொ.த. (உயர் தரத்) தகைமையுள்ளவர்களே சேர்க்கப்படுவர். ஆசிரியர்களுக்குச் சமசம் பளத்திட்டம் (கல்வித்தகைமைக்கேற்ப) நடைமுறைப் படுத்தப்படும். அவசியமான பாடவிதானமும் உருவாக்கப் படும்.

கல்வித்துறை வெள்ளை அறிக்கையின் சீர்திருத்தங்கள் இவையே. ஒரு நாட்டின் மாபெரும் சொத்து அதன் சிறுர்களே. அவர்களைச் சரியான வழியில் நடத்தி, நாட்டின் நலத்துக்காக அவர்களை உருவாக்குவதே உத்தேசிக்கப் பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் பிரதான குறிக்கோளாகும்.

## 4. பசிப்பிணியிலிருந்து விடுதலை

பெருகிவிட்ட சனத் தொகையினால் இன்று உலகம் எதிர் நோக்குகின்ற முக்கியமான பிரச்சினை போதிய உணவின்மையாகும். போதிய உணவின்மையும், ஊட்டமான உணவின்மையும் அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளைப் பெரும் பிரச்சினைகளுக் குள்ளாக்கி யுள்ளன. உலக சனத் தொகையில் மூன்றிலிரு பங்கினர் பட்டினியால் அல்லலுறும் அதேவேளையில் மூன்றிலொரு பங்கினருக்கே போதுமான அளவு உணவு கிடைக்கின்றது. வறுமைநிலை, வேலைவாய்ப் பின்மை என்பன காரணமாக ஆசிய, ஆபிரிக்க நாட்டு வறியமக்களுக்கு உணவு பெற்றுக் கொள்ளுதல் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் உணவுப் பற்றுக்குறைக்கு முதலாவது காரணம், அதிகரித்துவிட்ட குடிப்பெருக்கம் தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது; உலகின் இன்றைய குடித்தொகை 436 கோடிகளாகும்; இக்குடித்தொகை வருடாவருடம் 5½ கோடி வீதம் அதிகரித்து வருகின்றது. பொதுவாக வறிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கும் குடிப்பெருக்கத்திற்கு மிடையில் ஒரு சமநிலை நிலவாமையினால் தான் உணவுப் பற்றுக் குறை நிலவுகின்றது. ஆனால், உலகசனத் தொகைப் பெருக்கத்தையும், உணவு உற்பத்திப் பெருக்கத்தையும், ஒப்பிட்டுப்பார்க்கும்போது சர்வதேச ரீதியில் உணவு உற்பத்தியும் அதிகரித்து வருவது கண்கூடு. 1950–72 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் சனத்தொகை 37% அதிகரிக்க, உலக உணவுற்பத்தி 54% அதிகரித்திருக்கின்றது. அப்படியாயின், உணவுப் பற்றுக் குறைக்குக் காரணம் என்ன?

உலகில் உற்பத்தியான உணவுப் பொருள்கள் சரியான முறையில் உலகமக்களிடையே விநியோகிக்கப்படவில்லை என்பதே காரணமாகும், அபிவிருத்தியடைந்த சில நாடுகள் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான விளைநிலங்கள் இருந்தும் உணவுப் பொருட்களின் விலை, வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்காக முழு விளை நிலத்தையும் பயிர் செய்யாது விடுகின்றனர். சென்ற ஆண்டு ஐக்கிய அமெரிக்கா 5 கோடி ஏக்கர் நிலத்தினைப் பயிர் செய்யாது விட்டது. அத்துடன், உணவுப் பொருட்களின் விலை வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்காக ஏராளமான தானியங்கள் இறைச்சி, மீன்கள், பழங்கள் என்பன கடலில் வீணே கொட்டி நாசம் செய்யப்படுகின்றன. இவை பசியினால் வாடும் மக்களுக்குக் கிடைக்கக் கூடாதா?

உணவுப் பயிர்ச் செய்கைக்கு வறட்சி, பூச்சி, பீடைகள் என்பனவற்றினால் ஏற்படுகின்ற அழிவும் அதிகமாகும். எதியோப்பியாவில் கடந்த ஏழாண்டுகளாக நிலவும் வறட்சி கொடிய பஞ்சத்தையும் அழிவையும் ஏற்படுத்தியுள்ளது. ஆபிரிக்காவில் கோடிக் கணக்கான வெட்டுக்கிளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், விளை நிலத்திலுள்ள தானியங்களை முற்றாக அழித்து வருகின்றன. உணவுப் பொருட்களைச் சேகரித்து வைக்கும் சமயங்களில் கூட எலிகள் போன்றன வற்றால் சேதாரம் ஏற்படுகின்றது. மனிதன் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களில் ஏறக்குறைய 20% பூச்சிகளினாலும், நோய்களினாலும் அழிந்து விடுவதாகக் கணித்துள்ளனர். இலங்கையில் வருடா வருடம் வறட்சியினாலும், விலங்குகளாலும் தானிய உற்பத்தியில் 16% அழிந்து போகின்றது. பசிப்பிணியிலிருந்து மக்களை விடுவிக்க, வீணே அழிவுறும் உணவுப் பொருட்களை அழிவுறாது பாதுகாக்க வேண்டும்.

உணவு ஒதுக்கமும் பசிப்பிணிக்குக் காரணமாகும்; மாட்டிறைச்சி உற்பத்தியை இந்தியா தடைசெய்துள்ளது; பன்றியிறைச்சி உற்பத்தியை முஸ்லீம் நாடுகள் தடைசெய்துள்ளன. இவற்றிற்குக் காரணம் சமயமாகும். எத்தனையோ நாடுகளில் ஒட்டகம், குதிரை, முதலை, பாம்பு முதலான விலங்குகள் உணவாகக் கொள்ளப்படுகின்றன; இலங்கையில் இவை உண்ணப்படுவதில்லை. பனாட்டு, ஒடியல், மரவள்ளி முதலிய சுதேசிய உணவுகளே இன்று பலரால் ஒதுக்கப்படுகின்றன. கடலிலிருந்தும் நிலத்திலிருந்தும் புதிய உணவு வகைகளை நாம் பெற வேண்டும். பசிப்பிணியிலிருந்து உலக மக்களை விடுவிக்க வேண்டும்.

## 5. சர்வசன வாக்குரிமை பொன்விழா

இலங்கை ஒரு ஜனநாயக நாடு ஆகும்; மக்களால் மக்களிலிருந்து மக்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆளப்படும் ஆட்சி முறையாகும். ஒரு ஜனநாயக ஆட்சி முறை நிலவும் நாட்டில் மக்களுக்கு இருக்க வேண்டிய முக்கிய உரிமை, வாக்குரிமையாகும். இந்த உரிமை அந்நியரான பிரித்தானியர் நம்மை ஆளும்போதே, நமக்குக் கிடைத்த உரிமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1931 ஆம் ஆண்டு இலங்கையில் டொனமூர் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. அந்த அரசியல் அமைப்பு முறையினால் 1931 ஆம் ஆண்டு 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் சர்வசன வாக்குரிமை அளிக்கப்பட்டது; பிரித்தானிய மக்களுக்கே 1933 ஆம் ஆண்டு தான் சர்வசன வாக்குரிமை கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. 1931 ஆம் ஆண்டு நமக்குச் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டு 1981 ஆம் ஆண்டு ஐம்பது ஆண்டுகள் முடிவடைகின்றன. எனவே தான் இலங்கை 1981 ஆம் ஆண்டைச் சர்வசன வாக்குரிமைப் பொன் விழா ஆண்டாகக் கொண்டாடுகின்றது.

இலங்கையில் முன்பு நடைமுறையிலிருந்த கோல்புறூக் அரசியலமைப்பின் படி, தேசாதிபதியால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களே இலங்கையைப் பரிபாலித்தனர். இந்த அரசியலமைப்பில் பொதுத் தேர்தலுக்கு இடமில்லை; ஓரளவு சர்வாதிகார ஆட்சியாக விளங்கியது. இங்கு மக்களின் விருப்பு வெறுப்பிற்கு இடமில்லை. இதனால் நாட்டில் அரசியல் சீர்திருத்தம் வேண்டிக் கிளர்ச்சி செய்தனர். இந்நிலையில் தான் சர்வசன வாக்குரிமை நமக்குக் கிடைத்தது. அதனால் டொனமூர் அரசியலமைப்பின்படி 61 அங்கத்தவர்களில் 50 பேர் தேர்தல் மூலம் தெரிவாகினர். சர்வசன வாக்குரிமையின் இனிமையையும் பலத்தையும் நாம் 1931 இல் அனுபவித்தோம்.

1948, பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரமடைந்தது; 1972, மே, 22 ஆம் திகதி இலங்கை குடியரசாகியது; 1978, செப்டம்பர் 7 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு ஆகியது இன்று வரை சர்வசன வாக்குரிமை மூலமே, இலங்கை அரசாங்கத்தை நாம் தேர்ந்தெடுத்து வருகின்றோம். இன்று 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. சர்வசன வாக்குரிமையின் மூலம், நமக்கு அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள் சுதந்திர உரிமைகள் என்பன கிடைத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981 ஆம் ஆண்டு பொன்விழா ஆண்டாகும்: இந்த ஐம்பது ஆண்டுகளில், பொது மக்கள் தாம் விரும்பும் அரசாங்கத்தைச் சர்வசன வாக்குரிமை மூலம் தெரிவு செய்திருக்கிறார்கள்; இந்த உரிமையால் பொது மக்கள் நாட்டிற்கு உகந்ததும், சிறந்ததுமான அரசாங்கத்தை அமைக்கக் கூடிய பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் அதே வேளை, தவறான பாதையில் அரசாங்கத்தை ஒரு கட்சி இட்டுச் சென்றால் அக்கட்சியை அடுத்து வரும் தேர்தலில் ஒதுக்கி விடவும் முடிந்துள்ளது: அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்கள் கைகளில் இருப்பதற்குச் சர்வசன வாக்குரிமையே காரணமாகும்.

எனினும், இலங்கையில் 'நாடற்றவர்கள்' என இந்திய வம்சாவழியினரில் பலருளர்: இவர்கள் 1947 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஏழு பிரதிநிதிகளைத் தங்கள் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்தனர்; ஆனால், 1948 ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின் அரசாங்கம், இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தை நிறைவேற்றி, இந்திய வம்சாவழியினர் பலரின் வாக்குரிமையை இழக்கச் செய்தது; எனவே, இலங்கை மக்களில் பெரும் பகுதியினர் சர்வசன வாக்குரிமையின் பொன்விழாவைக் கொண்டாட, வாக்குரிமையற்ற இந்திய வம்சாவழியினர் வாக்குரிமை பறிக்கப்பட்ட 33 ஆவது ஆண்டைக் கொண்டாடுகின்றனர்.

சர்வசன வாக்குரிமைப் பொன்விழாவில் கலந்து கொள்வதற்காகவே பிரித்தானிய எலிசபெத் மகாராணியும், அவரது கணவரும் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

## 6. பசுமைப்புரட்சி

உலகின் 424 கோடி மக்களில், மூன்றிலிரு பகுதியினருக்குப் போதியளவு உணவும், ஊட்டமான உணவும் கிடைப்பதில்லை; இன்றைய உலகின் முக்கிய அச்சுறுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாக இருப்பது உணவுப்பற்றாக்குறையே. உணவு உற்பத்தியை அதிகரிப்பது தான், அதிகரித்து விட்ட, அதிகரித்துவரும் குடிப்பெருக்த்தின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடியது; எனவே தான், 'பசுமைப் புரட்சி'யில் உலக நாடுகள், குறிப்பாக குறைவிருத்தி நாடுகள் யாவும் இன்று ஈடுபட்டுள்ளன.

விளை நிலப்பரப்பை அதிகரித்தல், ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரித்தல், புதிய உணவு வகைகளை விருத்தி செய்தல் ஆகியன பசுமைப்புரட்சியின் முக்கியமான செயற்றிட்டங்களாகும். உலக நிலப்பரப்பு 3200 கோடி ஏக்கர்களாகும். இதில் ஏறத்தாழ 800 கோடி ஏக்கர் நிலமே பயிர்ச் செய்கைக்கு உகந்தது. பயிர்ச்செய்கைக்கு உகந்ததாகக் கருதப்படும் 800 கோடி ஏக்கரில் ஏறத்தாழ 50% பரப்பே இன்று விளை நிலமாகப் பயன்படுத்தப்படுகின்றது. எஞ்சிய பாகத்தைப் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வரச் சகல முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும்.

இந்த நிலங்களைப் பயிர்ச் செய்கைக்குட் படுத்துவதற்குத் தடை நீர்ப்பாசன வசதியின்மையேயாகும். நதிப் பள்ளத்தாக்குகளை அபிவிருத்தி செய்வதனாலும், நதிகளைத் திசை திருப்புவதனாலும், நீர்த்தேக்கங்களை அமைப்பதனாலும் நீர்வசதியில்லாத இடங்களுக்கு நீர் வழங்கலாம். உலகின் எல்லா நாடுகளும் நீர்ப்பாசனத் திட்டங்களை அமைப்பதில் இன்று கவனம் செலுத்தி வருகின்றன. எகிப்தின் அஸ்வான் அணைத்திட்டம், ஐக்கிய அமெரிக்காவின் தெனசி நதிப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டம், இலங்கையின் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்பன இவ்வாறானவையாகும்.

உலக நாடுகள் தரைகீழ் நீரையும் உணவு உற்பத்தி நடவடிக்கைகளுக்குப்பயன்படுத்தி வருகின்றன. கிணறுகள், குழாய்க் கிணறுகள் மூலம் தரை கீழ் நீர் பெறப்படுகின்றது. இலங்கையில் மன்னார், கிளிநொச்சி பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பயிர்ச்செய்கை கிணற்று நீர்ப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்திலேயே தங்கியுள்ளது. ஏரல் கடலிற்கும் கஸ்பியன் கடலிற்கும் இடையில் ருசியா 3000 அடி ஆழத்திலிருந்து நீரைப் பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஆக்டிக் அந்தாட்டிக் பிரதேசங்களில் காணப் படும் பனிக்கட்டி மலைகளை இழுத்துவந்து பாலைநிலங் களுக்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தவும் திட்டமுளது. கடல் நீரை நன்னீராக்கியும் விவசாயம் செய்யப்படு கின்றது; அல்ஜீரியா, இஸ்ரேல், குவைத் என்பன கடல் நீரை நன்னீராக்கிப் பயன்படுத்தி வருகின்றன. செயற்கை மழையை ஏற்படுத்துவதன் மூலம் நீரைப் பெறமுடியும். ஐக்கிய அமெரிக்கா, ருசியா, அவுஸ்திரேலியா என்பன இம்முயற்சிகளில் ஈடுபடுகின்றன.

ஏக்கருக்குரிய விளைச்சலைப் பெருக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பசுமைப்புரட்சியின் செயற்றிட்டமாகும்; புராதன கருவிகளையும், பண்டைமுறைச் செய்கைகளையும் மாற்றியமைப்பதன் மூலம் குறைவிருத்தி நாடுகளில் ஏக் கருக்குரிய விளைச்சலை அதிகரிக்க முடியும். றக்ரர் போன்ற நவீன யந்திரங்களைப் பயன்படுத்துதல், நவீன இரசாயன வளமாக்கிகளையும் கிருமி நாசினிகளையும் உபயோகித்தல், அதிக விளைச்சலைத் தரக்கூடிய தரமான விதைகளைப் பயன் படுத்தல் ($H_4$, $ADT_{27}$, $IR_8$) என்பன மூலம் ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிக்க முடியும். இன்று இலங்கை, இந்தியா முதலான நாடுகள் இவ்வகையில் யப்பானைப் போன்று, விளைச்சலைப் பெருக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஏக்கருக்கு 20 புசலாக இருந்த நெல்விளைச் சல் இன்று 140 புசல்வரை உயர்ந்தமைக்குக் காரணம் நவீன செய்கை முறைகளாகும்; பசுமைப் புரட்சியின் விளை வாகும்.

## 7. மாவட்ட அபிவிருத்தி சபைகள்

இலங்கையின் நிர்வாகத்தைப் பரவலாக்குவதற்காக, உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பே மாவட்ட அபிவிருத்தி சபைகளாகும். ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு அபிவிருத்தி சபை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்குத் தேர்தல் மூலம் அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களில் பெரும்பான்மை ஆதரவு பெற்றவர், அபிவிருத்தி சபைத் தலைவராக இருப்பார். தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களுடன், அம்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இச்சபையில் அங்கத்தவர்களாக இருப்பார்கள். மாவட்ட அபிவிருத்தி சபைகளின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும். மாவட்ட அபிவிருத்தி சபையின் செயலாளராக மாவட்ட அரசாங்க அதிபர் இருப்பார். அத்துடன் மாவட்ட அமைச்சர், தலைவர், சபையின் இரு உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட நிறைவேற்றுக் குழு ஒன்றும் இயங்கும்.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் இன்று 24 மாவட்டங்களிலும் இயங்கி வருகின்றன. மாவட்டரீதியான வளங்களை மதிப்பீடு செய்து, பட்டியல் தயாரித்தல், சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் குறுகிய, நீண்ட காலத் திட்டங்களை வகுத்தல், மாவட்டத்திற்கு வேண்டிய அபிவிருத்தி வேலை சம்பந்தமான யோசனை பெறுதல், மாவட்ட அமைச்சர் சமர்ப்பித்த தொடக்க அறிக்கைகளைப் பரிசீலனை செய்து விவாதித்து பிரேரணை நிறைவேற்றல், நிதியினைச் செலவிடல், சில வரிகள் மூலம் நிதியினைச் சேகரித்தல் முதலியன மாவட்ட அபிவிருத்தி சபைகளின் செயற்பாடுகளாகவுள்ளன. விவசாயம், நிலப்பயன்பாடு, மிருகவளர்ப்பு, கடற்றொழில், சிறு தொழில்கள், கூட்டுறவு, கிராமிய அபிவிருத்தி, வீடமைப்பு, பாடசாலைக் கட்டிட அமைப்பும் திருத்த வேலைகளும், சுகாதார சேவைகள், கலாச்சார அலுவல்கள், சிறிய நீர்ப்பாசன வேலைகள், சமூகசேவைகள் என்பனவற்றின் அபிவிருத்திகளை இச்சபை மேற்கொள்ளும்.

பல இனங்கள் வாழும் ஒரு நாட்டில் நிர்வாக அதிகாரத்தைப் பரவலாக்குவதன் மூலம், தேசிய ஒருமைப்பாட்டைப் பேண முடியும் என நம்பப்படுகிறது; இலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் உருவாக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைகளும், அவ்வாறான நிர்வாக அதிகாரப் பரவலாக்கங்களின் விளைவே. இந்த அபிவிருத்தி சபைகளின் செயற்பாடு கட்டுப்பாடற்ற சுதந்திரமான இயக்கத்திலும், கிடைக்கின்ற நிதி வளத்திலும் தங்கியுள்ளது. ஆனால், அபிவிருத்தி சபைகளின் நிறைவேற்று ஆதிக்கம், அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட மாவட்ட அமைச்சரால் கட்டுப்படுத்தப்பட இடமுள்ளது; அதேவேளை நிதியற்ற அபிவிருத்தி சபைகள், எவ்விதமான அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்ற முடியும் என்பதும் சிந்தனைக்குரியது.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் மாதாமாதம் கூடுதல் வேண்டும்; ஒரு அங்கத்தவர் தொடர்ந்து மூன்றுமாத காலத்திற்குக் கூட்டங்களுக்குச் சமூகம் அளிக்காது விட்டால், அவர் அங்கத்தவர் உரிமையை இழப்பார். மாவட்ட அபிவிருத்தி சபைகள், ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இயங்கவிருக்கும் பிரதேச சபைகளிலிருந்தும் ஆலோசனைகளைப் பெறும்; பிரதேசசபைகளுக்குக் கிராம சேவகர் பிரிவு மட்டத்திலான கிராமோதய சபைகள் தங்கள் ஆலோசனைகளை வழங்கவுள்ளன. எனவே, மக்கள் கூடுதலாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கவும், செயற்படுத்தவும் வாய்ப்புண்டாகிறது.

## 8. சூழல் மாசடைதல்

தொழில் நுட்பவியல் வளர்ச்சியால், இன்று உலகம் எதிர் நோக்குகின்ற மிகப்பெரிய பிரச்சினை சூழல் மாசடைதலாகும். தொழில் நுட்பவியல் வளர்ச்சியால் நவீன இயந்திர சாதனங்கள் பெருகியுள்ளன; கைத்தொழிற்சாலைகள் பெருகியுள்ளன. தொழில் மயமான நகரங்களில் சுற்றுாடல் மனிதனின் ஆக்கமாகவே தோன்றுகிறது. இத்தொழில் நகரங்கள் புழுதிப் படலங்களினாலும் புகை மண்டலங்களினாலும் மூடப்பட்டுள்ளன. எனவே, தொழில் நுட்பவியல் வளர்ச்சியால், இன்று வளி, நிலம், நீர் ஆகியன மாசடைந்து, உயிரினங்கள் ஆரோக்கியமாக வாழமுடியாத சூழ்நிலையை உருவாக்கி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலைப் புகையே வளி மாசடைவதற்கு மூல காரணமாகும். தொழிற்சாலைகள் கக்குகின்ற நச்சுத் தன்மை வாய்ந்த புகைகளும் தடித்த புகைகளும் புகை போக்கிகள் மூலம் வளி மண்டலத்துக்கு அனுப்பப்படு கின்றன. தொடர்ந்து நிகழ்வதால் அப்புகை எளிதில் நீங்குவதில்லை. மேற்கு ஜேர்மனியிலுள்ள றூர்ப்பள்ளத் தாக்கு புகைமண்டலத்தினால் மூடப்பட்டிருக்கின்றது. காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலைக்கு இரு மருங்கும் மக்கள் வாழமுடியாத சூழ்நிலையும், பயிர்செய்ய முடியாத சூழ்நிலையும் உருவாகிவிட்டன; இச்சுற்றாடலில் தாவரங்கள் யாவும் சீமெந்துத் துகளால் மூடப்பட்டுள் ளது; காற்று மாசடைந்துள்ளது. ஒரு சிறிய தொழிற் சாலையே இவ்வாறு சூழலை மாசடைய வைக்குமாயின், பிரமாண்டமான தொழிற்சாலைகளுள்ள ஐரோப்பிய நாடு களின் சூழல் எப்படியிருக்கும்?

மேலும், நகரங்களில் டீசல், பெற்றோல் முதலான எரிபொருட்களை எரித்தபடி, புகையைக் கக்கியவாறு விரைகின்ற கோடிக் கணக்கான மோட்டார் வாகனங் களும் வளியை அழுக்கடைய வைக்கின்றன. உதாரணமாக, யப்பான் வீதிகளில் சுவாசிப்பதற்குப் போதிய சுத்தமான வளி இல்லை அதனால், வீதிச்சந்திகளில் ஒட்சிசன் சிலிண் டர்களை மக்களுக்காக வைத்துள்ளார்கள்.

வளியிலுள்ள அழுக்குகள் மழை நீருடன் கலந்து நீரையும் நிலத்தையும் மாசடைய வைக்கின்றன. மழை நீர் குடிநீர்த் தேக்கங்களில் இத்தகைய அழுக்குகளைச் சேர்த்துவிடுகின்றது. தொழிற்சாலைகளில் இருந்து வெளி யாகும் அசுத்தக் கழிவுகள் யாவும் நதிகளில் கலக்க விடப் படுகின்றன. துப்பரவான நதிகளின் நீர் இந்த அசுத்தங் களினால் மாசடைகின்றது. ரைன் நதி இன்று குப்பை கூளங்களின் தொகுதியாகப் பாய்கின்றது. இன்று சமுத் திரங்களில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டு, பெற்றோலியம் எடுக்கப்படுகின்றது. அதனால், இன்று ஏறத் தாழ 20,000 கலன் எண்ணெய் கடல் நீருடன் ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் கலக்கின்றது. இந்த எண்ணெய் நீரோட்டங்களினால் எல்லா இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றது. அதனால் கடல்பறவைகள், டோல்பின், சீல், மீன் வர்க்கம் என்பன அழிவுற நேர்கின்றது.

நிலமே எங்களது இயற்கை வளங்களில் முதன்மையானது. ஆண்டிற்காண்டு அதிகரிக்கும் மக்களுக்காகக் காடுகள் அழிக்கப்படுகின்றன; காட்டு வளம் அழிவுறுகிறது; காட்டு விலங்குகள் அழிந்து போகின்றன. காடுகள் அழிவதால், மண்ணரிப்பு ஏற்பட்டு, வளமான நிலம் தரிசாகி விடுகின்றது, மேலும், இன்று நாம், இரசாயனப் பசளைகளையும் கிருமிநாசினிகளையும் கூடுதலாக உபயோகிக்கின்றோம். இவை மண்ணிலுள்ள பூச்சி புழுக்களை அழித்து விடுகின்றன. ஹெலிக்கொப்டர்கள் மூலம், மேலை நாடுகளில் பயிர்களுக்குக் கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றது; தேனி முதலான பூச்சியினங்கள் இதனால் அழிவுறுகின்றன. மகரந்தச் சேர்க்கை நிகழாது, எதிர்காலத்தில் மரம் செடிகள் காய்க்காது போகவும் நேரலாம். கிருமிநாசினி தெளிக்கப்பட்ட புற்களைத் தின்ற பசுக்களின் பாலை நாம் உபயோகிக்கின்றோம்; காய்கறிகளை உபயோகிக்கின்றோம். அவை புதிய வியாதிகளை மனிதருக்குத் தருகின்றன.

எனவே, தொழில் நுட்பவியல் வளர்ச்சியால் இன்று மனிதன் வாழக்கூடிய சூழல் அழுக்கடைந்து வருவதைக் காணலாம்.

## 9. கிராமோதய சபைகள்

இலங்கையில் நிர்வாகப் பரவலை உறுதிப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட சபைகளே மாவட்ட அபிவிருத்தி சபை, கிராமோதய சபை என்பனவாகும். கிராமோதய சபைகள், குறிப்பிட்ட ஒரு பகுதிக்கான அபிவிருந்தித் திட்டத்தைத் தயாரித்து வழங்கும். ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் ஒவ்வொரு கிராமோதய சபை நிறுவப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது. தொண்டர் இயக்கங்கள், சங்கங்கள், சமூகங்களின் தலைவர்கள் ஆகியோர் கிராமோதய சபை அங்கத்தவர்களாக இருப்பார்கள். கிராமோதய சபையில் இவர்கள் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றிருப்பார்கள்.

கிராம சேவகர் பிரிவிலுள்ள அரசாங்க ஊழியர், கூட்டுத்தாபன அதிகாரிகள் ஆகியோரும் கிராமோதய சபை அங்கத்தவர்களாவர். ஆனால், அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்காது. கிராமோதய சபைகளில் வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தலைவர் தெரிவு செய்யப்படுவார்; இவ்வாறு தெரிவாகும் தலைவரின் பதவிக் காலம் ஓர் ஆண்டாகும்.

சமுதாய நலன்புரி சங்கங்கள் எனக் கருதப்படும் அமைப்புகள், கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், மகிலா சமித்தி, பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், சமய இயக்கங்கள், சிரமதான, சர்வோதய இயக்கங்கள் ஆகியவை கிராமோதய சபையில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றன. அரசாங்க, கூட்டுத்தாபன அதிகாரிகள் கிராமோதய சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குவர்.

கிராமோதய சபைகள், தங்கள் கிராமசேவகர் பிரிவில் செய்யக் கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆராய்ந்து, முடிவு செய்து, உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்திலுள்ள பிரதேச சபைகளுக்குச் சமர்ப்பிக்கும்; எனவே, பிரதேச சபைகளுக்கு ஊடாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளிடம் கிராமோதய சபைகளின் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

அரசியல் சார்பு இயக்கங்கள் கிராமோதய சபையில் அங்கத்துவம் பெறமுடியாது; சமுதாயத்தின் பொது நலனைப் பேணுவதற்குக் கிராமோதய சபைகள் ஒரு களமாக அமைகின்றன. இக்கிராமோதய சபைகள் ஏற்கனவே ஒழிக்கப்பட்ட, கிராம, பட்டின சபைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தை நிரப்புவனவாக உள்ளன; ஆனால், புதிய அமைப்பில் அமைந்த நிர்வாகம் கிராம விவகாரங்களை ஆழமாக ஆராயும்.

இது ஒரு புதிய முறையாகும். இதன் மூலம் நாட்டின் நிர்வாகம் பன்முகப்படுத்தப்படுகின்றது. மக்களுக்கும் நிர்வாகத்துக்குமிடையில் சிறப்பான ஒருங்கிணைப்பை இது ஏற்படுத்துகின்றது. கிராமங்களின் பிரச்சினைகளை, நட்புறவுடனும் கூட்டு முயற்சி வாயிலாகவும், தீர்த்து வைப்பதற்காக இச் சபைகள் நிறுவப்படுகின்றன.

இன்று நாடு முழுவதும் 3000 கிராமோதய சபைகள் நிறுவப்பட்டுள்ளன.

## 10. அபிவிருத்தியா, ஆயுத உற்பத்தியா?

உலக நாடுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய மூலதனம், இன்று உலக நாடுகள் பலவற்றினதும் படைப்பலத்தைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது; அபிவிருத்தி அடைந்த நாடுகள் இன்று போட்டி போட்டுக் கொண்டு ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகின்றன. உலக நாடுகளின் வருடாந்த இராணுவச் செலவு ஏறத்தாழ 540 மில்லியன் டொலர்கள் எனக் கணக்கிட்டுள்ளனர்; இலங்கை போன்ற குறை விருத்தி நாடுகளே இராணுவச் செலவாக அபிவிருத்திக்கு உதவவேண்டிய பணத்தில் பெரும்பகுதியைச் செலவிடுகின்றன. 1981 இல் இலங்கை இராணுவச் செலவு 27 கோடி ரூபாவாகவும், பொலீஸ் படைச் செலவு 38 கோடி ரூபாவாகவும் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அபிவிருத்தியடைந்த நாடுகள் ஒரு புறம் ஆயுதங்களை உற்பத்தி செய்து குவித்து வருகின்றன. துப்பாக்கிகள், டாங்கிகள், போர் விமானங்கள், ஏவுகணைகள், அணுக்குண்டுகள் என அவை மனித குல அழிவுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைச் செலவிடுகின்றன; 'உலகில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டுமாயின், ஆயுத உற்பத்தி அவசியம் என அவை தமது செயலிற்குக் காரணமும் கூறிக் கொள்கின்றன. அதே வேளை குறை விருத்தி நாடுகள் பலவற்றில் பஞ்சம், பசி, வறுமை, ஊட்டமின்மை, நோய்களி, கல்வியின்மை, வீட்டு வசதியின்மை, சுகாதாரவசதியின்மை மருத்துவ வசதியின்மை, வேலை வாய்ப்பின்மை என்பன காரணமாக ஏராளமாக மக்கள் பாதிப்படைந்துள்ளனர். போதிய மூலதனமின்மை இந்த நாடுகளின் அபிவிருத்தியைப் பாதித்துள்ளது. அபிவிருத்தி யடைந்த நாடுகள், குறைவிருத்தி நாடுகளுக்கு வழங்குகின்ற உதவித் தொகை, ஆயுத உற்பத்திக்குச் செலவிடும் தொகையில் 4 சதவீதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய ஒரு நவீன யுத்த டாங்கியின் உற்பத்திச் செலவானது ஏறத்தாழ 1 மில்லியன் டொலராகும். இத் தொகையினைப் பயன்படுத்தி, 1 இலட்சம் தொன் அரிசியினை சேமித்து வைக்கும் களஞ்சியங்களை அமைக்க முடியும். இதன் மூலம் வருடாந்தம் 4000 தொன் தானியங்களைக் கூடுதலாகச் சேமிக்கலாம்; அதன் மூலம் பல லட்சக் கணக்கான மக்களுக்கு பஞ்சத்தினின்றும் நிவாரணமளிக்கலாம். ஒரு டாங்கிக்கான செலவினத்தைப் பயன்படுத்தி 1000 வகுப்பறைகளைக் கொண்ட கல்விக் கூடங்களை அமைத்து, 30000 பிள்ளைகள் கல்வி வசதிகளைப் பெறும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஒரு நவீன ஜெட் யுத்தவிமானத்தின் விலை 20 மில்லியன் டொலர்களாகும். இப் பணத்தைக் கொண்டு 4000 கிராமங்களுக்கு, மருத்துவ வசதிகளை அமைத்துக் கொடுக்க முடியும். உலக நாடுகள் பலவற்றிலுமுள்ள மலேரியா நோயை, வருடாந்த இராணுவச் செலவின் அரைநாள் செலவைக் கொண்டு தீர்த்துவிட முடியும்.

எனவே, மனிதாபிமானக் கண்கொண்டு பார்க்குமிடத்து மனிதனின் முன்னேற்றத்திற்குக் காட்டுகின்ற கவனத்தைவிட, உளத்தை அழிப்பதில் கூடியளவு கவனம் செலுத்தப்படுவதையே காணமுடிகிறது. தற்போது உலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்குத் தேவை அபிவிருத்தியா, ஆயுத உற்பத்தியா என்பதனை வல்லரசுகளே தீர்மானிக்க வேண்டும். சமாதானப் பேச்சு வார்த்தைகளும், ஆயுத உற்பத்தி, விற்பனைக் கட்டுப்பாடுகள் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளும் நடைபெற்று வருகின்றன. வெற்றி கிட்டுமா?

மக்கள் அழியப் பிறந்தவர்களல்லர்; வாழப் பிறந்தவர்கள்.

(தழுவல்: சி. ரகுலேந்திரன், ஈழநாடு - 4.11 81)

## 11. பெற்ரோலிய அரசியல்

பெற்ரோலியத்தின் விலையேற்றம் உலக நாடுகள் அனைத்தினதும் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது; பெற்ரோலியத்தை ஒரு ஆயுதமாகவும், பெற்ரோலியத்தை ஒரு அரசியலாகவும் மத்திய கிழக்கு நாடுகள் இன்று பாவிக்கின்றன. கூட்டு மொத்தமாக நோக்கில் இன்று உலகில் மிகக் கூடுதலாகப் பெற்ரோலியத்தை உற்பத்தி செய்யும் நாடுகள் மத்திய கிழக்கு அராபிய நாடுகளாகும்; சவுதி அரேபியா 12 5%—உம், ஈரான் 10%—உம், ஈராக் 4.1%—உம், குவைத் 3.4%—உம் உற்பத்தி செய்து வருகின்றன. எனவே, உலகப் பெற்ரோலிய உற்பத்தியில் 30% அராபிய நாடுகளே உற்பத்தி செய்து வருகின்றன. மேலும், பெற்ரோலிய மூலவளத்தில் 50% மத்திய கிழக்கு நாடுகளிடமே உள்ளது. எனவேதான், இந்த நாடுகளால் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதாரத்தைக் கூட அச்சுறுத்த முடிகின்றது.

சுமார் 20 வருடங்களுக்கு முன் மத்திய கிழக்கின் எண்ணெய் வயல்கள் பல வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்களுக்குச் சொந்தமாக இருந்தன. ஆங்கிலோ - அமெரிக்கக் கம்பனிகள், பிரான்சியக் கம்பனிகள் என்பன மத்திய கிழக்கின் எண்ணெய் வயல்களில் அதிக பங்கினைக் கொண்டிருந்தன. மத்திய கிழக்கு நாடுகளில் தேசிய அரசாங்கங்கள் தோன்றியதும் எண்ணெய் வியாபார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் பலவும் தேசிய உடைமையாக்கப்பட்டன. வெளிநாட்டின் கட்டுப்பாட்டில் அரபு நாடுகளின் எண்ணெய் நிறுவனங்கள் இருந்ததால் அரபு நாடுகளுக்குரிய ஈட்டுத் தொகை மிகக் குறைவாக இருப்பதை உணர்ந்தன; அதனல், பெற்றேலியத்தின் விலையை உயர்த்துவது இன்றியமையாதது என அரபு நாடுகள் எண்ணத் தலைப்பட்ட வேளையில் அராபிய - இஸ்ரேலிய பிரச்சினைகள் தலைதூக்கின.

எகிப்தும் சிரியாவும் இணைந்து இஸ்ரேலுடன் நிகழ்ந்த யுத்தத்தில், 1967 இல் எகிப்து தனது ஆள்புலத்தில் சில பகுதிகளை இழந்தது; 1973 இல், ருசிய ஆதரவுடன் ருசிய ஆயுதங்களுடன் எகிப்தும் சிரியாவும் இஸ்ரேலை எதிர்த்து தாம் இழந்த நிலப் பகுதிகளை மீட்டன. இந்த அராபிய-இஸ்ரேலிய யுத்தத்தில், இஸ்ரேலுக்கு அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஆதரவு தெரிவித்தன; உதவின. அதனல், பாலஸ்தீனியப் பிரச்சினைக்கு அராபிய நாடுகளால் ஒரு முடிவு காணமுடியாது போனது; எனவே, அமெரிக்க, ஐரோப்பிய வல்லரசு நாடுகளைப் பழிவாங்க அரபு நாடுகள், பெற்றேலிய விலையேற்றத்தை ஒரு ஆயுதமாகப் பாவிக்கத் தொடங்கின.

அதற்காக ஒபெக் (*Opec*) என்ற நிறுவனம் உருவாக்கப்பட்டது; பெற்றேலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம் இதுவாகும். ஈரான், வெனெசுவெலா, சவுதி அரேபியா, ஈராக், குவைத், லிபியா ஆகியநாடுகள் ஒபெக்கில் இணைந்தன. வெனெசுவெலா அரபு நாடல்ல, எனினும், அரபு நாடுகளின் நிலைமையே அந்த நாட்டிலும் இருப்பதால் அதுஒபெக் நிறுவனத்தில் சேர்ந்துள்ளது. ஒபெக் நிறுவனம் 1970-77 இல் ஒரு பீப்பா எண்ணெயின் விலையை 72% உயர்த்தியது. இந்த விலை உயர்வு காலத்திற்குக் காலம் அதிகரித்து வருகின்றது. இன்று 300% அதிகரித்துள்ளது. இந் நிறுவனத்தின் விளைவாக மத்திய கிழக்கு நாடுகளில் விருத்திகள் ஏற்பட்டு வருகின்றன. இந்தநாடுகள் இன்று உலகின்செல்வம் மிக்க சில நாடுகளாக மாறிவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராபிய நாடுகளின் பெற்ரோலிய ஏகபோகம் ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகள் என்பனவற்றைப் பெரிதும் பாதித்தது; அபிவிருத்தி யடைந்து வரும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளையும் பாதித்தது. உலக நாடுகளில் பெரும் பொருளாதாரச் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. வர்த்தக ரீதியான பொருட்களின் விலை ஏறியது; பயிர்ச் செய்கை, கைத்தொழில் என்பன பாதிப்புற்றுள்ளன. கப்பல் முதலான கொண்டு செல்லற் செலவு அதிகரித்தது. அதனுல் ஒவ்வொரு நாடுகளினதும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. உலக நாடுகள் தமது வருமானத்தில் பெரும் பகுதியை அராபிய நாடுகளிடம் பெற்ரோலியத்துக்காகச் செலவிட நேர்ந்துள்ளது. 1950 இல் பெற்ரோலியத்திஞல் 5½ கோடி டொலரை வருவாயாகப் பெற்ற சவுதி அரேபியா இன்று 256 கோடி டொலரை வருவாயாகப் பெறுகிறது.

பெற்ரோலிய விலையேற்றத்திற்கு அராபிய-இஸ்ரேலிய யுத்தத்தையும், ஒபெக் நிறுவனத்தையும் மாத்திரம் குற்றம் சாட்டுவது ஏற்றதாகாது. அரபு நாடுகள் தம் நாடுகளில் இருக்கின்ற மீளா வளமாகிய பெற்ரோலியத்தை உரிய விலையில் விற்றுத் தமது நாடுகளைச் செழிப்பாக்க முயல்வது தவறல்ல. பெற்ரோலிய ஆய்விற்கும், கிணறு தோண்டுவதற்கும் அதிக மூலதனம் தேவை. 50 கிணறுகளில் ஒன்றுதான் பயன் தரும். தொழில் நுட்பம் வாய்ந்த தொழிலாளரின் கூலியும் அதிகரித்திருக்கின்றது. இவை யாவும் பெற்ரோலியத்தின் விலையை அதிகரித்திருக்கின்றன. அரசியல் நிலைமைகளும் பெற்ரோலிய விலை ஏற்றத்திற்குக் காரணமாகும். அராபிய-இஸ்ரேலிய யுத்தம், ஈரான்-ஈராக் யுத்தம், உள்நாட்டுக் கலவரங்கள் என்பன பெற்ரோலிய விலை ஏற்றத்திற்குக் காரணங்களாகும்.

## 12. துரித மகாவலி அபிவிருத்தி

துரித மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டமே இலங்கையின் மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டமாகும். 208

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைல்கள் நீளமான மகாவலி கங்கை, இலங்கையின் பரப்பில் 4000 சதுரமைலைத் தன் வடி நிலமாகக் கொண்டிருக்கின்றது. இது அதிக மழை பெறுகின்ற, மத்திய மலைநாட்டில் உற்பத்தியாவதால் வருடா வருடம் 66 இலட்சம் ஏக்கரடி நீரைக் கடலில் சேர்க்கிறது. இந்த நீரை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்துவது அவசியமாதலால், மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் இத்திட்டம் 30 ஆண்டுகளில் நிறைவேற்றப்படுவதாக வகுக்கப்பட்டது. ஆனால், இன்று அதனை ஆறு ஆண்டுகளுள் நிறைவேற்றி முடிப்பதற்கு ஏற்றதாக துரித மகாவலி அபிவிருத்தித் திட்டமாக வகுத்துள்ளனர்.

மகாவலி கங்கையில் அணைகள் கட்டி நீர்த் தேக்கங்களை உருவாக்கிக் கால்வாய்கள் மூலம் நீரை விளை நிலங்களுக்கு எடுத்துச் செல்வதே திட்டமாகும். பொல்கொல்லை, விக்டோரியா, றன்தெனிகல, றன்தெம்பை, மதுருஓயா, மொறக்கந்த ஆகிய இடங்களில் நதிகளுக்குக் குறுக்கே அணை கட்டப்பட்டு, நீர்த் தேக்கங்கள் உருவாக்கப்படுகின்றன. பொல்கொல்லை நீர்த்தேக்கம், போவத்தன்னை நீர்த் தேக்கம், மதுருஓயா நீர்த்தேக்கம் என்பன உருவாக்கப்பட்டுள்ளன. மொறக்கந்த நீர்த் தேக்கம், விக்டோரியா நீர்த்தேக்கம் என்பன உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த நீர்த்தேக்கங்களிலிருந்து நீர் வடபுறமாகக் கால்வாய்கள் மூலம் எடுத்துச் செல்லப்படும்; குறுக்கிடும் மலைகள் குடையப்பட்டு சுரங்க வழிகள் உருவாக்கப்பட்டுள்ளன; பொல்கொல்லைச் சுரங்கம், போவத்தன்ன சுரங்கம், உல்கித்த ஓயாச் சுரங்கம் என்பன குறிப்பிடத்தக்கன. பொல்கொல்லையிலிருந்து குறுலுவீவா வரை ஒரு பிரதான கால்வாய் அமையும்; மொறக்கந்த நீர்த்தேக்கத்திலிருந்து கந்தளாய் குளம் வரை எல்கராக் கால்வாய் அமையும்; றன்தெம்பை நீர்த்தேக்கத்திலிருந்து அம்பன் கங்கை வரை மினிப்பேக் கால்வாய் அமையும். இவற்றைவிட றன்தெம்பையிலிருந்து மதுருஓயாவை இணைத்தும் ஒரு கால்வாய் அமையும். இக் கால்வாய்களில் பல வெட்டப்பட்

டுள்ளன. கிளைக்கால்வாய்கள் முன்னுள்ள நீர்ப்பாசனக் குளங்களுக்கும் நீர் வழங்கவுள்ளன.

துரித மகாவலித்திட்டம் அமைக்கப்பட்டு நிறைவுறும் போது, இன்று நீர்ப்பாசன வசதி பெறுகின்ற அதேயளவு, புதிய நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைக்கும். இன்று இலங்கையில் ஏறத்தாழ 9¼ இலட்சம் ஏக்கர் நீர்ப்பாசனம் பெறுகின்றது; இன்னொரு 9 இலட்சம் ஏக்கர் மகாவலித்திட்டத்தால் நீர்ப்பாசனம் பெற வாய்ப்புண்டாகிறது. அதனால், இலங்கை உணவில் தன்னிறைவு அடைந்து விடும் என்பதில் சந்தேகமில்லை.

மேலும், மகாவலித்திட்டத்தில் உருவாக்கப்படும் நீர்த்தேக்கங்களிலிருந்து நீர்மின் வலு நிலையங்கள் அமையவிருக்கின்றன. இவற்றின் மூலம் 200 கோடி கிலோவாட் மின்சாரம் பெறமுடியும். இவை கைத்தொழிலாக்கங்களுக்கு உதவுவனவாக அமையும். மகாவலி அபிவிருத்திப் பிரதேசத்தில் புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவும் திட்டமிருக்கிறது. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத் தொழில்கள் நிறுவப்படவுள்ளன; இவற்றினை ஆராய யப்பானிய நிறுவனம் ஒன்றின் உதவி நாடப்பட்டிருக்கின்றது. மகாவலி குடியேற்றங்களில் குடியமர்த்தப்படும் விவசாயிகளின் வருங்காலச் சந்ததிகளுக்கு கைத்தொழில்கள் தொழில் வசதி அளிக்கக் கூடியனவாகவிருக்கும்.

அத்துடன், மகாவலித்திட்டம் நிறைவேற்றப்படும் போது ஏறத்தாழ 10 இலட்சம் மக்கள் அபிவிருத்திப் பகுதிகளில் குடியேற்றப்படுவர். தொழிற் பிரச்சினைகள், வதிவிடப் பிரச்சினைகள் என்பன இதன் மூலம் தீர்த்து வைக்கப்படும். இது ஒரு மாபெரும் குடியேற்றத்திட்டமாகும். ஒரு குடும்பத்திற்கு இரண்டரை ஏக்கர் நீர்ப்பாசன நிலம் வழங்கப்படவிருக்கிறது. மகாவலித்திட்டம் நிறைவேற்றப்படும் போது வெள்ளப் பெருக்கும் கட்டுப்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும், உணவுற் பத்தியை அதிகரிக்கவும், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங் களுக்கு நீர்ப்பாசன வசதிகளை யமைத்துக் கொடுக்கவும், விரயமாகும் இயற்கைவளமான நீரைப் பயன்படுத்தவும், நீர்மின்வலு உற்பத்தியை அதிகரிக்கவும், மக்களை அடர்த் தியான பகுதிகளிலிருந்து பரவலாகக் குடியிருத்தவும் துரித மகாவலி கங்கைத் திட்டம் அவசியமாகும்.

## 13. அணிசேராக் கொள்கை

1948, பெப்ரவரி, 4 ஆம் திகதி இலங்கை சுதந்திர மடைந்தது; அந்த நாளிலிருந்து நமது நாடு அணிசேராக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. இலங்கையைப் போன்று பல நாடுகள் விளங்கி வருகின்றன. முதலாளித் துவ வல்லரசுகளுடனோ, சோஷலிச வல்லரசுகளுடனோ இந்த நாடுகள் பகைமை பாராட்டுவதில்லை; சார்ந்து நிற்பதுமில்லை, எல்லா நாடுகளுடனும் அணிசேராக் கொள் கையைப் பின்பற்றும் நாடுகள் நட்புப் பூண்டு ஒழுகுகின் றன. அது இந்த நாடுகளின் பாதுகாப்பிற்கும், அபி விருத்திகளுக்கும் அத்தியாவசியமானதாக வுள்ளது.

உலக நாடுகள் சில சில காலங்களில் நட்பாக விருப்ப தும், சிலகாலங்களில் எதிரிகளாக மாறுவதும் உண்டு ஒரு காலத்தில் ருசியாவும் சீனவும் நட்பாக இருந்தன; இன்று அவை ஒன்றினை ஒன்று பகைமையுடன் நோக்குகின்றன. ஒரு காலத்தில் சீனவும் அமெரிக்காவும் பகைமை பாராட் டின. ஆனல், இன்று அவை நட்புக் கொண்டுள்ளன. 'எனது எதிரியின் எதிரி எனக்கு நண்பன்' என்கிறது சீன; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது அணிசேரா நாடுகளின் சித்தாந்தம்.

சித்தாந்த வேறுபாடுகளால் பிரிந்துள்ள உலக நாடு கள், முக்கியமாக அபிவிருத்தி யடைந்த நாடுகள், தமக் குள் அணிசேர்ந்து சில நிறுவனங்களை உருவாக்கி யுள்ளன.

நேட்டோ (Nato) என்ற வட அத்திலாந்திக் ஒப்பந் தத் தாபனம், ருசியாவினதும் அதனைச் சார்ந்த நாடுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னினதும் படையெடுப்புகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் உருவாக்கிய அணியாகும்; அதேபோல ருசியா, கிழக்கு ஜேர்மனி, போலாந்து, ருமேனியா, ஹங்கேரி முதலான கம்யூனிச நாடுகள் முதலாளித்துவ நாடுகளினது படையெடுப்புகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வார்சோ ஒப்பந்தத் தாபனம் என்ற அணியை உருவாக்கியுள்ளன. மேலும், கம்யூனிஸ்ட் நாடுகள் தம்மைத் தாக்கும் என அஞ்சி அவுஸ்திரேலியாவும், நியூசிலாந்தும், பசுபிக் கிழக்கு, தெற்கு எல்லைகளிலுள்ள சில நாடுகளும் பரஸ்பர உதவியளிக்கும் நோக்கத்துடன் சியாட்டோ (Seato) என்ற தென் கிழக்காசிய உடன்படிக்கைத் தாபனம் என்ற அணியை உருவாக்கியுள்ளன.

இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னரேயே (1945) அணிசேராக் கொள்கை. நடுநிலைமை வகிக்கும் நாடுகளிடையே ஏற்பட்டது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது, நாடுகளிடையே ஏற்பட்ட சேதங்கள், அழிவுகள் அவ்வாறான ஒரு யுத்தம் மீண்டும் ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தைச் சமாதானம் விரும்பும் நாடுகளிடையே ஏற்படுத்தின. வல்லரசுகள் தங்கள் ஆயுதப் பலத்தை அதிகரித்துச் செல்கின்ற அதேவேளை, அணிசேரா நாடுகள் தம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முயல்கின்றன. ஒவ்வொரு நாட்டினதும் தன்னுரிமைத்தையும் இறைமையையும் மதித்து, சமாதானத்தைப் பேண வேண்டும் என்ற பெரு நோக்கமே அணிசேராக் கொள்கையை மதிக்கும் நாடுகளின் எண்ணமாகும்; இவை எந்த ஒரு அணியின் பக்கமும் சேராது நடுநிலை வகிக்கின்றன. நேருவின் 'பஞ்சசீலக்' கொள்கையின் அடியாகவே, இந்த அணிசேராக் கொள்கை உருவாகியது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

அணிசேராக் கொள்கையில் மூன்றாம் மண்டல நாடுகளே முக்கிய இடம் வகிக்கின்றன. இந்தியா அணிசேராக் கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையைப் பின்பற்றுகின்ற போதிலும், தனது படைப் பலத்தை அதிகரிப்பதில் இன்று கவனம் செலுத்தி வருகிறது. சீன-இந்திய யுத்தம், பாகிஸ்தானிய-இந்திய யுத்தம் என்பன அதனது கொள்கையை மறுபரிசீலனை செய்ய வைத்துள்ளன; இலங்கையைப் பொறுத்த வரையில் அணிசேராக் கொள்கை அவசியமானதே. இலங்கை வளர்ந்து வரும் ஒரு நாடு; அதன் அபிவிருத்திக்கு உலக நாடுகள் யாவற்றினதும் ஒத்துழைப்புத் தேவை. அதனால்தான் இலங்கைக்கு அமெரிக்கா, பிரித்தானியா, ருசியா, சீனா முதலான பல நாடுகளும் நட்புடன் உதவிவருகின்றன.

ஆம், எங்களுக்கு யாவரும் நண்பர்களே.

## 14. சுதந்திர வர்த்தகவலயம்

ஒரு நாட்டின் குறித்தஒரு பிரதேச எல்லைக்குள் வெளி நாட்டவர்களும் உள் நாட்டவர்களும் இணைந்து, தீர்வைகளற்ற இறக்குமதிப் பொருட்களையும் உற்பத்திச் சாதனங்களையும், உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களையும் பயன்படுத்தி, சர்வதேச சந்தையில் போட்டியிடக் கூடிய கைத்தொழிற் பொருட்களை உற்பத்தி செய்கின்ற அமைப்பையே சுதந்திர வர்த்தக வலயம் என்பர். கிரீஸ், அயர்லாந்து, வெனெசுவெலா, தைவான், பிலிப்பைன், சிங்கப்பூர், கொங்கொங் முதலிய நாடுகளில் சுதந்திர வர்த்தக வலயங்கள் இயங்கிவருகின்றன. இலங்கையிலும் ஒரு சுதந்திர வர்த்தக வலயம் செயற்படத் தொடங்கியுள்ளது.

இலங்கைப் பாராளுமன்றத்தில் 1978–இல் நிறைவேற்றப்பட்ட 'பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக் குழு'ச் சட்டத்திற்கு இணங்க, சுதந்திர வர்த்தக வலயம் நிர்வகிக்கப்படுகின்றது. சுதந்திர வர்த்தக வலயம் இலங்கையின் தென்மேல் பிரதேசத்தில், கொழும்பு நகருக்கு வடக்கே களனிகங்கைக்கும் மகா ஓயாவிற்கும் இடையில் 200 சதுர மைல் பரப்பில் அமைக்கப்பட்டிருக்கின்றது. களனி, வத்தளை, யாஎல, நீர்கொழும்பு ஆகிய பகுதிகள் இதனுள் அடங்குகின்றன. உவப்பான கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை, சமதரை, நீர்வசதி, போக்குவரத்து வசதிகட்கு உதவும் வீதிகள், விமான நிலையம், துறைமுக வசதி என்பன, தந்தி தகவல் வசதிகள், சுகாதார மருத்துவ வசதிகள் முதலான காரணிகள் இப்பிரதேசத்தில் சாதக மாகவுள்ளன. கொழும்பிற்கு அருகில் இப்பிரதேசம் அமை வது மிக வசதியானதாகும். இப்பிரதேசம் அதிக மக்கட் செறிவைக் கொண்டிருப்பதால் தொழிலாளர் வசதியுள் ளது. கட்டுநாயக்க விமானத் தளம், சர்வதேச விமானத் தளமாகும்.

இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயம் அமைக்கப் படுவதற்குப் பல காரணங்களுள்ளன. கைத்தொழில் துறை யின் ஏற்றுமதியை அதிகரித்தல், தொழில், வாய்ப்புகளை உருவாக்கல், பயன்படுத்தப்படாதிருக்கும் மூலப்பொருட் களைப் பயன்படுத்தல், அந்நிய மூலதனத்தைப் பெறுதல், விவசாயப் பொருளாதாரத்தைப் பயன்படுத்தல் என்பன காரணங்களாகும்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் உற்பத்திச் சலுகைகள் உள்ளன. இயந்திரங்களை இறக்குமதி செய்ய சுங்கவரி யில்லை. முதல் ஐந்து ஆண்டுகளுக்கு வருமான வரியில்லை. நிலக்குத்தகை 99 வருடங்களுக்கு வழங்கப்படும். தொழி லாளர் சட்டங்களில்லை. தொழிற் சட்டங்கள் இந்த வலயத்தில் செல்லுபடியாகா. இவை காரணமாக அந்நியத் தொழிலதிபர்கள் இந்த வலயத்தில் முதலீடு செய்ய முன்வருகின்றனர். இங்கே ஆரம்பிக்கப்படும் தொழில்களால் 50 ஆயிரம் பேருக்குத் தொழில் கிடைக் கும் என நம்பப்படுகிறது. அந்நிய நாடுகளின் தொழில் நுட்பமும், மூலதனமும் எம் நாட்டிற்கு இதன் மூலம் கிடைக்கும். சர்வதேசத் தரத்திற்கு அவர்களால் உற்பத் திப் பொருட்களைச் சந்தைப்படுத்த முடியும்.

சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழிற்சாலைகளை நிறு வுவதற்குப் பல வெளிநாட்டு நிறுவனங்கள் முன் வந்துள் ளன. வெளிநாட்டு நிறுவனங்கள் சில, சுதேசிய நிறுவனங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் இணைந்தும் இங்கே கைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தங்கள் செய்துள்ளன. இந்த வலயத்தில் ஆடைகள், பாதணிகள், இலாஸ்ரிக், விஞ்ஞான உபகரணங்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் முதலியன உற்பத்தி செய்யப்படவுள்ளன.

எமது நாடு நவீன கைத்தொழிற்றுறையில் அனுபவமும் தொழில் நுட்பமும் குறைந்தது; அதன் கைத்தொழிற் பொருட்களுக்கு வெளிநாட்டுச் சந்தைகளைத் தேடிக் கொள்வதும் கடினம். அனுபவமும் அறிவுமுள்ள வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்கள் சுதந்திர வர்த்தக வலயத்தில் முதலீடு செய்து தொழில்களை ஆரம்பிக்குமாயின் நமது நாடு பயனடைய வாய்ப்புண்டு.

## 15. சர்வதேச வலது குறைந்தோர் ஆண்டு

உலக மக்களின் கவனத்தை ஈர்க்க வேண்டிய பிரச்சினைகளைத் தேர்ந்தெடுத்து, ஐக்கிய நாடுகள் சபை காலத்திற்குக் காலம் அவற்றிற்கென சர்வதேச ஆண்டுகளைப் பிரகடனப்படுத்தி வருகின்றது. இதற்கமைய முறையே பெண்கள், சிறுவர், வலது குறைந்தோர், முதியோர், இளைஞர் ஆகிய சமூகப்பிரிவினருக்காகச் சர்வதேச ஆண்டுகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. 1981 ஆம் ஆண்டு வலது குறைந்தோருக்கான ஆண்டாகும். இவ்வாண்டின் போது மாத்திரம் நாம் வலது குறைந்தோரைப்பற்றிக் கவனம் செலுத்த வேண்டும் என்பதில்லை. இவ்வாண்டில் நாம் வலது குறைந்தோருக்கு விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்பதே குறிக்கோளாகும்.

வலது குறைந்த தன்மையை நாம் பிரச்சினையாகக் கருத வேண்டுமா? ஆம். எம் மத்தியில் அநேகர், குறைந்த பட்சம் பத்துப் பேரில் ஒருவர், ஏதோ ஒரு வகை வலது குறைந்த தன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். கண் பார்வையில், செவிப்புலனிலில், மூளை வளர்ச்சியில், அல்லது உடற் கூறுகளில் பாதிப்பு ஏற்பட்டோர் வலது குறைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோர் என்ற பிரிவில் அடங்குவர். உடலியற் குறைபாடுகளும் உளவியற்குறைபாடுகளும் இப்பிரிவில் அடங்கும். எனினும், கண் பார்வைக் குறைவினால், காது கேளாமையால், கால் ஒன்று கட்டையாதலினால், போலியோ நோயால் பாதிக்கப்பட்டமையால், புத்திக் குறைவினால் எவரும் வலது குறைந்தவராக மாட்டார். அது உடலில் அல்லது உள்ளத்தில் ஏற்படும் ஊனம் மாத்திரமே. அவர் வலது குறைந்தவராதல் அல்லது ஆகாமை சமூகம் அவருக்கு அளிக்கும் மதிப்பைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது.

இத்தகைய உடலியல், உளவியல் குன்றபாடுகள் ஏற்படுவதற்கு வயது, கால எல்லை, ஆண்-பெண் வித்தியாசம் என்பன கிடையாது. வாழ்க்கையில் எப்பருவத்தில் எமக்கு வலது குறைந்ததன்மை ஏற்படும் என நாம் கூறமுடியாது. உடலியல், உளவியல் குறைபாடுகளைவிட, அவர்களைச் சமூகம் ஒதுக்குவதுதான் பாரதூரமான சிக்கலைத் தோற்றுவிக்கின்றது. வலது குறைவு காரணமாக ஏற்படும் வரையறுக்கப்பட்ட தன்மை காரணமாகக் குறிப்பிட்ட தனி நபர், சமூகத்தின் ஏனைய பெரும்பான்மையினரைவிட மாறுபட்ட நிலைமைகளின் கீழ் வாழ நேரிடுகிறது. ஆனால். மனிதர்கள் இதனைப் புரிந்து கொள்வதில்லை. வலது குறைந்தோரை அதிசயப் பிறவிகளாகவே அவர்கள் கருதுகின்றனர். வலது குறைந்தோர் ஒன்றுமே இயலாதவர்கள், அனுதாபத்துக்குரிய நிலைமையில் வாழ்பவர்கள் என்றும் கருதப்படுகிறது. இவர்கள் சுய கௌரவம் அற்ற, தன்னைப் பற்றிய உணர்வு அற்ற பிறவிகள் என்றும் சமூகம் கருதுகின்றது.

இது பெருந் தவறாகும். கடமைகள், உரிமைகள் என்பனவற்றை அர்த்தமுள்ள வகையில் வலது குறைந்தோரால் பிரயோகிக்க முடியாது என்றும் பலர் கருதுகின்றனர். வலது குறைந்த தன்மை ஏற்படுதல் ஒரு நபரைத் தாழ்வாகக் கருதுவதற்குக் காரணமாக அமையக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிமக்கள் என்ற முறையில் நாம் அனுபவிக்கும் வசதிகளை வலது குறைந்தவரும் அனுபவிக்கச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். வலது குறைந்தவருக்கும் எம்மைப் போன்றே தேவைகள், ஆசைகள், உணர்வுகள் உள்ளன. நாளாந்த வாழ்வில் நாம் பங்கு கொள்வது போன்றே அவர்களுக்கும் அவசியமான வசதிகளையும் சந்தர்ப்பங்களையும் வழங்க நாம் முன்வர வேண்டும்.

வலது குறைந்த தன்மை ஏற்பட்ட ஒரு நபர் அதனை மீறி எழுவதற்கு எமது ஒத்துழைப்பு அவசியம். ''ஐயோ பாவம்; அநாதை பாவம்; புண்ணியம் கருதி உதவி செய்வோம்'' என்ற சொற்றொடர்கள் மூலம் வலது குறைந்தோருக்கு உங்களின் ஒத்துழைப்புக் கிடைக்கப்போவதில்லை. எனவே, வலது குறைந்தோரை விழித்து மேற்படி சொற்பிரயோகங்களை உபயோகிக்க வேண்டாம்; குருடன், செவிடன், முடவன், விசரன் என்ற சொற்களை எங்கள் சொற்றொகுதியிலிருந்து நீக்கிவிடுவோம். வலது குறைந்த தன்மையால் ஒரு நபருக்கு ஏற்பட்டுள்ள தீங்குகளைச் சுட்டிக் காட்டாமல், அவரது விசேஷத் திறமைகளைப்பற்றி அடிக்கடி கூறுவோம். வலது குறைந்த தன்மை காரணமாக ஒருவர் பொருளாதார, சமூக ரீதியில் பிறரில் தங்கிவாழ நேரிடும் போது அது பலவீனமாகிறது. எனவே அவர்கள் செய்யக் கூடிய வேலைகளை வழங்கி அவர்களைத் தன்மானத்துடன், தன்னம்பிக்கையுடன் வாழ வைப்போம்.

(தகவல்: சர்வதேச வலது குறைந்தோர் ஆண்டுச் செயலகத்தின் பிரசுரத்திலிருந்து.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளா

செயலா

பொன் உ

---

விற்காத புத்தகம்.

அச்சிட்ட 2000 பிரதிகளில்

[illegible]

அதில் விற்பனையானவை

200க்கு [illegible]

[illegible]

[illegible].

1977-1982 (2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org